(10)

தோட்டத் துரையின் துப்பாக்கியைப் பொலிசார் கைப்பற்றினர்

அரசியல் பின்னணி காரணம்?

கொழும்பு'வெள்ளி இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து எல்லா என்ற பகுதியில் உள்ள ஒரு தோட்டத்துரையின் துப்பாக்கி ஒன்றினை இரகசியப் பொலிஸ் அரசியல் பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியிருக்கிறார்கள்.

காபந்து பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக்கா இம்மாத இறுதியில் தமது தேர்தல் பிரசார வேலைகளை யொட்டி பிரயாணம் செய்யவிருக்கும் பாதையில் மேற்குறித் தோட்டத்துரையின் வாசஸ்தலம் இருப்பதாக அறியப்படுகின்றது.

காபந்து பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா இம்மாதம் ஹப்புத்தளைக்கும் விஜயம் செய்து அங்கு புதிய பாதையொன்றையும் திறந்து வைக்கவிருக்கிறார். இத் தொகுதியில் திரு. மொன்டேகு ஜயவிக்கிரமா போட்டியிடவிருக்கிறார்.

சம்பந்தப்பட்ட தோட்டத்துரையின் நடமாட்டங்களை இரகசியப் பொலிசார் அவதானித்து வருவதாகவும் தெரிகின்றது.

—சி. பி. ஏ.

Registered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15 ★★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

பக்கம் 12

இதழ்: 53

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 22 முஹூர்தம் 26 சனிக்கிழமை [4-4-70]

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு

யுனிக்-நாவுனல்

றேடியோக்கள்

விலை வெகுவாகக்

குறைக்கப்பட்டுள்ளன.

V. K. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

புத்தாண்டை பொலிவுடன்

கொண்டாட

உங்களுக்கும் உங்கள் குழந்தைச்

செல்வங்களுக்கும் தேவையான

சகல விதமான

ஜவுளி வகைகளும்

றெடிமேட் உடுப்புகளும்

மலிவான விலைகளில்

பெற்றுக் கொள்ளலாம்

விக்னேஸ்வரா

ஜவுளி மாளிகை

பஸ் நிலையத்துக்கு முன்

யாழ்ப்பாணம்.

யாழ். ஐக்கிய இலாப நிதிச் சங்கத்தின்

தங்க நகைகள் பாதுகாப்பில்; 97 நபர்கள் பொலிஸில் புகார்

வவுனியா

கொலை முயற்சி வழக்கு இரு எதிரிகளும் விடுதலை

யாழ்ப்பாணம், சனி வவுனியா கொலை முயற்சி வழக்கில் எதிரிகள் இருவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர்டாக்டர்வீரமந்திரி முன்னிலையில் நான்காவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் வவுனியா வில் 68-ம் ஆண்டு ஜனவரி 13-ம் திகதி பாலசிங்கம் என்பவரை, கதிரவேலு நாகலிங்கம், கதிரவேலு தர்மலிங்கம் ஆகியோர் கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே.வி.எஸ்.சண்முகநாதன் ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எல். டி. குருசாமி ஆஜரானார்.

அட்டோர்னி ஜெனரலிடம் பொலிஸார் ஆலோசனை

யாழ்ப்பாணம், சனி யாழ்ப்பாணம் ஐக்கிய இலாபநிதி சங்கத்தைக் கலைத்துநடவடிக்கை எடுப்பதற்காக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியால் நியமிக்கப்பட்ட குலைப்பாளரிடம், பொலிசாரினால் பாரமேற்கப்பட்ட தஸ்தாவேஜுகளும் சொத்துக்களும் ஒப்படைக்கப்படவில்லை; இது சம்பந்தமாக பொலிசார் அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனையைக் கோரியுள்ளார்கள்.

சங்கத்தின் உரிமையான சுமார் 5 லட்சம் பெறுமதியான தங்கநகைகள் தற்பொழுது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சங்கத்தில் பற்று-வரவு வைத்திருப்போர்களில் 97 பேர் பொலிசாரிடம்முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பொலிசார் பூர்வாங்க விசாரணையை முடித்துள்ளார்கள்

இது ஒரு [illegible] விசேஷ இரகசிய பொலிசார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கோரியுள்ளார்

சங்கத்தில் பற்று-வரவு வைத்திருப்போரில் மூன்று பேர் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்து சங்கத்தை கலைத்து நடவடிக்கை எடுப்பதற்காக ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ம விமானம்

யாழ்ப்பாணம். சனி வவுனியா தொகுதியிலுள்ள விமானத்துறையில் வந்திறங்கிய மர்ம விமானம் கொழும்பில் உள்ள ஒரு தனிப்பட்ட ஸ்தாபனத்திற்குரிய விமானமென இரகசிய பொலிசாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது

இனிமேல் இந்த விமானத்துறையில் இறங்கும் எந்தவிமானமென்றாலும் சரி பொலிசாருக்கு முன் கூட்டியே அறிவிக்க வேண்டுமென வடபகுதி பொலிஸ் அதிபர் தெரிவித்திருக்கிறார்.

இந்த மர்ம விமானம்

"வாழ்த்தினால் போதாது; வாழவும் வையுங்கள்"

உடுப்பிட்டி, வெள்ளி "கலைஞர்களை வாழ்த்தினால் மட்டும் போதாது. அவர்களை வாழ வைக்கவும் வேண்டும். இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போல் நம் நாட்டவர்கள் மனத்தைத் தவறான வழியில் இழுத்துச் செல்லும் தமிழகப் படங்களில் நாட்டம் காட்டுகின்றனர். ஆனால் கலையுணர்வுடனும், பண்புடனும், மிளிரும் ஈழத்துத் தமிழ்ப்படங்களின் தரத்தை மதிப்பிடத் தவறிவிடுகின்றனர்."

இவ்வாறு "மஞ்சள் குங்குமம்" படத்தில் முன்று வேடங்களில் நடித்து அமோக பாராட்டுதல்கள் பெற்றுள்ள ஈழத்துச் சினிமாநடிகர் திரு. ஸ்ரீசங்கர் கவலை தெரிவித்தார்.

நெல்லியடி லட்சுமி பட மாளிகையில் 'மஞ்சள் குங்குமம்' படத்தைத் திரையிட்டு வைத்து ரசிகர்கள் முன்னிலையில் ஸ்ரீ சங்கர் பேசினார். ஸ்ரீசங்கரைப் பார்ப்பதற்காக ஏராளமானோர் தியேட்டரின் உள்ளேயும், வெளியேயும் திரண்டிருந்தனர். தியேட்டர் மனேஜர் திரு. சபாரத்தினம் மலர்மாலை சூட்டிச் ஸ்ரீசங்கரை வரவேற்றார்.

நெல் உற்பத்தி 7 லட்சத்தால் அதிகரிப்பு

கோட்டை, வெள்ளி கடந்த முன்று மாதத்திலும் இலங்கையில் அறுவடை செய்யப்பட்ட நெல் சென்ற ஆண்டிலும் பார்க்க 7 லட்சம் புசலில் அதிகரித்துள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரி (ஒரு

அமெரிக்காவில் 6 வீத சம்பள உயர்வு

வாஷிங்டன், ஏப்ரல். 3

அமெரிக்காவில் 60 லட்சம் ஊழியர்களுக்கும் இராணுவத்தினருக்கும் 6 சத விகித சம்பள உயர்வு வழங்க ஜனதிபதி நிக்சன் முடிவு செய்துள்ளார்.

இச் சம்பள உயர்வு பற்றி ஜனதிபதி நிக்சன் அமெரிக்க கான்கிரசிடம் அங்கீகாரம் கோரியிருக்கிறார்.

அண்மையில் நடைபெற்ற

இவ் வழக்கில் வவனியா எல். டி. குருசாமி ஆஜரானர்.

"ஈழநாடு"
பாலிதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலிதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

உதவி வழங்கியோர்:

நேற்றுவரை சேர்ந்த தொகை	9062-82
பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை ஊழியரதும் பருத்தித்துறை வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்களினதும் நன்கொடை (இரண்டாம் பகுதி)	235-25
க. முருகேசு அப்போதிக்கரி மந்திகை (தபாற்கட்டளை)	5-00
அட்வக்கேட் எஸ். பொன்னையா திருநெல்வேலி	10-00

அங்கீகரிக்கப்பட்ட 8 அரசியல் கட்சிகள்

கோட்டை, வெள்ளி

வரும் பொதுத்தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், அதன் சின்னங்களும் வருமாறு:-

பு என் பி

எஸ் எல் எவ் பி

தமிழரசுக்கட்சி

தமிழ் காங்கிரஸ்கட்சி

சமசமாஜக்கட்சி

கம்யூனிஸ்ட் (மாஸ்கோ)

மக்கள் ஐக்கிய முன்னணி

ஜாதிக விமுக்திக பெரமுன

தாவேஜுகளும் சொத்துக்களும் ஒப்படைக்கப்படவில்லை; இது சம்பந்தமாக பொலிசார் அட்டோர்ணி ஜெனரலின் ஆலோசனையைக் கோரியுள்ளார்கள்.

யாழ். ஐக்கிய இலாபநிதி நிந்துபொலிசார் பூர்வாங்க விசாரணையை முடித்துள்ளார்கள்

இது ஒரு பெரிய விசாரணை. இதிலுள்ள விசேஷ இரகசிய பொலிசாரின் உதவியை அளிக்குமாறு செய்த மனுவைத் தொடர்ந்து சங்கத்தை கலைத்தீட வடிக்கை எடுப்பதற்காக குலப்பாளர் ஒருவர் மாவட்ட நீதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தார்

சரி பொலிசாருக்கு முன் கூட்டியே அறிவிக்க வேண்டுமென வடபகுதி பொலிஸ் அதிபர் தெரிவித்திருக்கிறார்

இந்த மர்ம விமானம் வவனியாவிலுள்ள இறங்குதுறையில் வந்து மர்மமாக இறங்கிவிட்டு பறந்து சென்றது பற்றி செய்தி நேற்றைய 'ஈழநாட்டில்' வெளியாகியிருந்தது தெரிந்ததே

7 லட்சம் புசலினால் அதிகரித்துள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த பத்து வருடத்திலும் பார்க்க இவ் வருடம் 4 மடங்கு அதிகமான நெல் விளைந்துள்ளதாகவும் நெல்விளைச்சலில் அனுராதபுர மாவட்டமே முதல் இடத்தைப் பெற்றுள்ளதென்றும் அறிவிக்கப்படுகிறது.

அரசியல்லாபத்துக்கு

சிறுபான்மையினர் பிரச்னையை பயன் படுத்தக் கூடாது'

முன்னாள் உபசபாநாயகர் கூறுகிறார்

உடுப்பிட்டி, வெள்ளி

"சிறுபான்மைச் சமூக மக்களின் முன்னேற்றத்தில் தான் பெரிதும் அக்கறை செலுத்தி வருகின்றேன். சிறுபான்மை சமூகத்தவரின் பிரச்னைகளை அரசியல் லாபங்களுக்காகப் பயன் படுத்துவதை நான் எதிர்க்கின்றேன். அடக்குமுறை, பலாத்காரம் மூலம் சிக்கல் அதிகரிக்குமேயொழிய ஒரு போதும் தீராமாட்டாது. மனமாற்றம் மூலம் தான் இதற்குப் பரிகாரம் காண முடியும்."

இவ்வாறு முன்னாள் உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம் பியுமான திரு எம் சிவசிதம்பரம் அல்வாய் வடக்கில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்

திரு ஆர் எஸ் செல்வத்துரை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது திரு எம் சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"வேலைவாய்ப்புகளில் சிறுபான்மைச் சமூக வாலிபர்கள் ஒதுக்கப்படுவதாகச் சிலர் பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றனர் எனது தொகுதியில் தான் சிறுபான்மை சமூகத்தவர்கள் அதிகமானோர் அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன் படித்த வாலிபர்கள அத்தனை பேருக்கும் தனியொரு ஆட்சிமன்ற உறுப்பினரால் விமோசனம் பெற்றுக் கொடுத்துவிடமுடியாது வேலை கிடைக்காத வாலிபர்கள என்மீது குறை கூறுகின்றனர் இதனை நான் ஏற்றுக் கொள்ளுகின்றேன் எமது சமூக அமைப்பே இதற்குக் காரணம்

எனது தொகுதி வாலிபர்களின் உத்தியோக நியமனங்களில் நான் பாரபட்சமாக ஒருபோதும் நடந்து கொண்டதில்லை எனது மனச்சாட்சிக்கும், நியாயத்திற்கும் மாறான பாதையில் நான் ஒருபோதும் செல்லமாட்டேன்

எமது தமிழ்க் கட்சிகள சமஷ்டியா, சுயாட்சியா என்பதில் இழுபறிபடுகின்றன ஆனால் இன்றைய இன்றியமையாத பிரச்னை சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் மீட்பதே இப்போதைய அவலநிலை தொடருமானால், எமது உரிமைகளைப் பாதுகாக விட்டால், சுயமரியாதையுடன் வாழ வழி காணவிட்டால் தமிழினம் சுவடு தெரியாமல் அழிந்துவிட நேரிடும்

ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

நாளை ஐக்கிய இலங்கை ஸ்தாபனத் தொழிலாளர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் 42-வதுவருடாந்த மகாநாடு தாய்ச் சங்கச் செயலாளர் திரு. ஆர் செல்லையா தலைமையில் யாழ், நகர மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

நிபுணர் கிரேக் இங்குவந்துள்ளார்

கோட்டை, வெள்ளி

தென்கிழக்காசிய விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் கட்டிட ஆராய்ச்சி நிலைய நிபுணர் திரு. எல். என் கிரேக் தற்போது இலங்கைக்குவந்துள்ளார். திரு கிரேக் இங்கு தங்கிநிற்கும் நாட்களில் கிராமங்களில் குறைந்தசெலவில் வீடமைக்கும் திட்டங்களில் கட்டிட முறைகளைப் பிரயோகிக்கும் முறைகளைப்பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் கூறுவர்.

வரவேற்புபசாரம்

இளவாலை, வெள்ளி

மலேஷியாவில் கத்தோலிக்க குருவாக இருக்கும் வண. பிதா பி. அ. செல்வநாயகம் இம்மாதம் 7-ந் திகதி தமது பிறந்த ஊரான சில்லாலைக்கு வருகிறார் அன்றுமாலை சில்லாலை புனித மரியாய் தேவாலயத்தில் முதல் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றுவார். இதனைத் தொடர்ந்து ஊர்மக்கள் வண. பிதாவுக்குவரவேற்புபசாரமளிப்பர்

தேசிய சுவீப்
முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்றுமாலை இழுக்கப்பட்ட 292-வது தேசியசுவீப் முடிவுகள் விபரம் வருமாறு-

முதலாம்பரிசு

16 S 0230 ரூ 100000

இரண்டாம் பரிசு

08 V 0862 ரூ 40,000

மூன்றும்பரிசு

22 B 0034 ரூ 10,000

தலா 694-60 பரிசுபெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

33	W 0335	42	D 0546
29	Y 0326	27	Z 0889
40	M 0956	03	J 0695
24	E 0211	13	G 0437
24	F 0350	30	R 0452
30	V 0362	41	L 0840
17	G 0481	31	Q 0534
08	M 0035	19	Q 0077
26	J 0612	11	F 0295
14	R 0918	28	N 0329
06	O 0825	04	M 0425
33	F 0939	25	U 0563
34	P 0518	34	R 0343
	30 S 0465		
34	T 0645	27	K 0883
28	U 0077	13	S 0799
12	A 0352	32	S 0143
37	Z 0123	20	V 0383
21	I 0054	11	X 0738
26	G 0933	26	E 0920
13	G 0325	30	K 0995
41	Z 0447	09	R 0364
27	H 0250	26	T 0362
01	C 0992	21	Z 0282
41	U 0797	03	U 0783
18	U 0282	01	Y 0644
35	T 0527	36	U 0255
15	K 0023	41	Z 0028
09	J 0676	10	O 0666
19	A 0572	10	A 0595
17	W 0201	32	Y 0768
25	U 0351	21	T 0349
04	K 0291	16	E 0981
20	Y 0905	16	C 0511
11	D 0168	19	Y 0284
07	S 0947	04	U 0823
35	W 0563	02	V 0005
10	Y 0069	22	O 0276
16	A 0427	08	U 0115
39	C 0589	03	Y 0911
29	K 0705	08	K 0690
21	K 0746	44	O 0377
16	L 0949	15	J 0135
08	V 0335	14	F 0006
11	S 0052	03	G 0140
13	A 0189	18	A 0560
42	L 0482	13	B 0040
04	K 0689	22	L 0042
26	W 0823	12	X 0812

அரசியலில் ஈடுபட்டதாக இரு ஆசிரியர் வேலைநீக்கம்

யாழ்ப்பாணம், சனி

அரசியலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரு ஆசிரியர்கள் கல்வி இலாகாவால் தற்காலிக வேலைநீக்கஞ்செய்யப்பட்டுள்ளனர். அரசியல் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றியதாக இவர்கள்மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியைச் சேர்ந்த இரு ஆசிரியர்களே தற்காலிக வேலைநீக்கஞ் செய்யப்பட்டனர்.

வர்களாவர். கடந்த வருடக் கடைசிப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இ. தி. மு. க. மகாநாட்டில் பேசியதாக ஓர் ஆசிரியரும், மற்றைய ஆசிரியர்மீது சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிக் கூட்டத்தில் பேசியதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடந்த 31ந் திகதியிலிருந்து இவர்கள் தற்காலிக வேலை நீக்கஞ் செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவை நிராகரிக்கும்படி

ராஜ்ய சபையில் அறிவிப்பு

புதுடில்லி, ஏப்ரல்.3

பூரி சங்கராச்சாரியாரை ராஜ்யசபையில் கண்டித்துப் பேசியது சம்பந்தமாக விசாரணை நடாத்துவதற்காக ஆட்சிமன்ற உறுப்பினர்கள் 5 பேருக்கு கிடைக்கப் பெற்ற நீதிமன்றஉத்தரவை நிராகரிக்கும்படி மத்திய சட்டமந்திரி திரு கோவிந்த மேனன் இன்று ராஜ்யசபாவில் அறிவித்தார். சபை உறுப்பினர்களுக்கு கோர்ட் உத்தரவு பிறப்பிக்கும் பொழுது சட்ட மந்திரியை நீதிமன்றம் அழைத்திருக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். அண்மையில் பூரி சங்கராச்சாரியாரைப் பற்றி முன்னாள் சபாநாயகர் உள்துறை அமைச்சர் சவானும் உட்பட 5 உறுப்பினர்கள் சபையில் கண்டித்துப் பேசியதாக தொடரப்பட்ட வழகை சம்பந்தமாகவே நீதிமன்றம் இவர்களை கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பித்திருந்தது.

சபையில் நடைபெறும் பேச்சுவார்த்தை சம்பந்தமாக நீதிமன்றத்தில் விசாரிப்பதால் உறுப்பினர்களின் உரிமைகள் மீறப்படுவதாக இருக்கும் என்று சட்ட மந்திரி கூறினர்.

16	V 0159	20	X 0802
	16 J 0622		

இலையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை.

சினட்டர் தாக்கப்பட்டார்

கொழும்பு, வெள்ளி

சினட்டர் ரெஜி பெரேராவும் அவரது இரு நண்பர்களும் இன்று மாலை பம்பலப்பிட்டியாவில் உள்ள உணவுச்சாலை ஒன்றிலிருந்து வெளிவந்தபோது, இனந் தெரியாத சில நபர்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

சினட்டருக்கோ, அவரது நண்பர்களுக்கோ காயமெதுவும் ஏற்படவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரஜாவுரிமைக்கான

கடைசி நாளை தள்ளிப்போடுக

கொழும்பு, வெள்ளி

இலங்கை அல்லது இந்திய பிரஜாவுரிமைக்குமனுப்பண்ணும் கடைசிநாளை ஏப்ரல் 30ந் திகதியிலிருந்து தள்ளிப்போடும்படி இலங்கை தொழிற்காங்கிரஸ் தலைவர் திரு எஸ். தொண்டமான் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏற்கனவே இவர் விடுத்த இப்படியான ஒரு வேண்டுகோளை பிரதமர் ஏற்கவில்லை. ஏப்ரல் 30-ம் திகதியே கடைசி நாளாயிருக்குமென்று பிரதமரும் அரசாங்க அதிபர்களும் பல சந்தர்ப்பங்களில் அறுதியிட்டுக கூறியிருக்கிறார்கள்.

காலக்கெடுவைத் தள்ளிப் போடாவிட்டால் இலங்கைக்கே நஷ்டமென்றும் இலங்கைஇந்தியர் பிரஜாவுரிமைபெற முடியாத இந்திய வம்சாவழியினர் தொடர்ந்தும் இலங்கையிலேயே தங்கவேண்டி ஏற்பட்டுவிடும் என்றும் திரு தொண்டமான் குறிப்பிட்டுள்ளார். சி.பி.ஏ.

சிங்கள சினிமா நடிகர்கள் அரசியலில் ஈடுபடமாட்டார்

கொழும்பு, வெள்ளி

சிங்கள சினிமா நடிகர்கள் சங்கம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சிக் கூட்டணியை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபடமாட்டாது என்று இப்பொழுது திட்டவட்டமாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

தேவை

பெற்ரோல் செட்டுக்குப் பிணைப்பணம் கட்டக்கூடிய மனேஜரும் கடை வேலையில் சேல்ஸ்மனும் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2007

கொழும்புக்கருகாமையிலுள்ள தொழிற் சாலையொன்றில் சமையல் செய்பவருக்கு உதவிச் சமையல் ஆண்பிள்ளை ஒருவர் தேவை. விபரங்கட்கு: ஜபர்ஜீ பிரதர்ஸ், 28, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்துக்கு நேரில் வரவும்.
2011

மட்டக்களப்பில் வீடு ஒன்றில் தங்கியிருந்து சமைப்பதற்கு நபர் ஒருவர் தேவை. கிழ்க்காணும் விலாசத்திற்கு உடன் நேரில் வரவும். C S K. மில், யாழ்ப்பாணம்.
1965

நல்ல நிலையிலுள்ள பாவித்த 10 அந்தர் நிறை கொள்ளக்கூடிய அவறி (Avery) பைப் நிறுக்கும் மெஷின் தேவை. 16-4-70ம் திகதிக்கு முன் விலை விபரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2014, 'ஈழநாடு' மேபா யாழ்ப்பாணம்.
2014

பொலிஸ் வாரம்

கோட்டை, வெள்ளி

நாடுபூரவும் பொலிஸ் வாரம் இம்மாதம் 7-ம் திகதியிலிருந்து 14-ம் திகதி வரை கொண்டாடப்பட விருக்கிறது.

பல விதமான விளையாட்டுகளையும், காணிவலையும் நடாத்துமாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அலரிக் அபயகுணவர்த்தனு ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் அறிவித்துள்ளார்.

விற்பனைக்கு

காணி:

இராமநாதன் கல்லூரிக்கு அருகாமையில் உடுவில் ரோட்டில் கிணறு உள்ள ஆறு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சி. சுப்பிரமணியம், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 285.
2015

கடை:

யாழ்ப்பாணம் பெரிய கடை கஸ்தூரியார் வீதியில் பிரபலமாக வியாபாரம் நடக்கும் ஸ்தாபனம் ஒன்று இருக்கும் மேல்மாடியுடன் கூடிய கிட்டங்கி விற்பனைக்கு உண்டு. கடிதம் மூலம் தொடர்பு கொள்க. இல 2013, மேபா 'ஈழநாடு' லிமிட்டட், யாழ்ப்பாணம்.
2013

கிரிமலை - வாடி வீடு 27 பரப்பு. காங்கேசன்துறை வீதி. கேணி, துறை முகம், சிமெந்து தொழிற்சாலைக்கு அடுக்காமையில்- 2 அல்லது 3 பரப்புத் துண்டுகளாக வீட்டுடன் அல்லது வீடில்லாமல் பெற்றுக்கொள்ளலாம். பருத்தித்துறை12பரப்பு வி. எம்.வீதி வடமராட்சிப் பெண் பாடசாலைக்கு அருகாமையில். 2 பரப்புத் துண்டுகளாகப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும். நாகநாதன், அத்தியடி, பருத்தித்துறை.
2012

ச. ச. நிலையம் தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சன சமூக நிலைய புதுவருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு: தலைவர்: சே.சிவசுப்பிரமணியம், காரியதரிசி: மு. வாமதேவன், தனுதிகாரி: ந. சுந்தரலிங்கம்.

இந்து புதுவருட தினத்தன்று சொற்பொழிவுகள், நாடகங்கள், இன்னிசைக்கச்சேரிகளை நிகழ்த்துவதென்று நிலையம் தீர்மானித்துள்ளது.

அறிவித்தல்

இதன் கீழ் கையொப்பம் வைக்கும் உரித்திரபுரம் 10-ம் வாய்க்கால் குடி. சுப்பிரமணியம் பேராயிரசிங்கம் ஆகிய நான் உருத்திரபுரம் பலநோக்கு ஐக்கிய சங்கத்தில் முகாமையாளர் பதவிக்கு நியமனம் பெற்ற தற்காக மேற்படி சங்கத்திற்கு ரூபா 3000/- பெறுமதியான அசைவற்ற ஆதனப்பிணை கொடுக்கவேண்டியிருந்தது.

அவ் ஆதனப் பிணையை எனது பேரர்களான மண்டைதீவு தெற்கு இளையதம்பி, சிற்றம்பலமும், உருத்திரபுரம் 10-ம் வாய்க்கால் இளையதம்பி, கணபதிப்பிள்ளையும், தம்மிருவருக்கும் சொரியலாய் சொந்தமான காணியொன்றை மேற்படி சங்கத்திற்கு எனது சார்பில் பிணையாகக் கொடுத்து நொத்தாரிஸ் சி. பொ. மயில்வாகனம் முகதாவில் 136-ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணை உறுதியை21-7-1967ல் நிறைவேற்றினர்.

இவர்கள் எனக்காகக் கொடுத்த பிணைத்தொகைக்குப் பொறுப்பாக அதே திகதியில் ஒவ்வொருவருக்கும் ரூபா 1500/-க்கு ஒரு சத்தியவாக்குச் சீட்டுக் கொடுத்துள்ளேன்.

அந்தச் சத்திய வாக்குச் சீட்டுக்குப்பதிலாக எதுவித கிரயத்தையும் நான் இற்றை வரைக்கும் பெறவுமில்லை. அவர்கள் தரவுமில்லை. அச் சீட்டுக்கள் வெறும் பொறுப்புக்காக மாத்திரம் நம்பிக்கையின் பேரில் கொடுக்கப் பட்டன.

இப்பொழுது அவர்களுக்கும் எனக்கும் மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது. இம்மனக்கசப்பின் காரணமாக எனது பேரர்கள் நான் நம்பிக்கையின் பேரில் வெறும் பொறுப்புக்காக மாத்திரம் அவர்களுக்குக் கொடுத்த சத்திய வாக்குச் சீட்டுக்களை சாட்டுதல்பண்ணி சித்தாரித்து என்னைக் கோர்ட்டுக் கிழுத்து கரைச்சல் தருவதாகப் பயமுறுத்துகிறார்கள்.

எனவே நான் இதனால் வெளிப்படுத்தி எல்லோரையும் வேண்டுவது என்னவென்றால் மேற்சொல்லிய சத்தியவாக்குச் சீட்டுகளை எவரும், எப்பெறுமதி கொடுத்தும் சாட்டுதல் பெறக்கூடாதென்றும்

ராஜா சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
(யாழ்ப்பாணம்) நம்பியார் - தங்கவேலு
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஹரிச்சந்திரா

ராணி ஜெய்சங்கர் (3 வேடங்களில்)
(யாழ்ப்பாணம்) விஜயநிர்மலா - பாலையா
தினசரி 3 காட்சிகள் நடித்த
திரிக்க முகம்

தெய்வீக சுகமளிக்கும்
ஆராதனைகள்
ஏப்பிரல் மீ 3-ம் திகதி முதல் 6-ம் திகதி வரை
மாலை 6 மணிக்கு
வீரசிங்கம் மண்டபத்தில்
(யாழ்ப்பாண பெரிய தபால் கந்தோர் அருகில்)
வீசாரணைகள்
இலங்கை பெந்தெகோஸ்தே சபை,
111, கண்டி ரோட்,
சுண்டிக்குளி. 2206

இன்றையபலன்

பங்குனி மாதம் 22-ம் திகதி [4-4-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

மேஷம்- இனம் தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள். வாய்வுப்பதார்த்தங்களை தவிர்த்துக்கொள்ளவும். சகோதரவழியாலும் கவலை தோன்றக்கூடும். பெரியவர் ஒருவரின் அறிவுரை ஆறுதலளித்தரும்.

ரிஷிபம்- சுகபோகதினம். சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள். ஆடம்பரமான ஆடைகளில் மனநாட்டம் செல்லும். படித்தவர்களின் தொடர்பினால் பயனடைவீர்கள். எல்லாம் இன்பமயம்.

மிதுனம்- இதயத்தில் இனிமை துள்ளும். பகைவர்கள் பணிவர். வணிகர்களுக்கு வியாபாரவிருத்தியுண்டு. பரந்தநோக்குடன் செயற்படுவதன் மூலம் பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும்.

கடகம்- பகைமூட்டம் தோன்றும். பதட்டமும் உடன் சேரும். மிகையான போக்கினாலே மனதும் பாழாய்ப் போகும்.

சிம்மம்- பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகள் உண்டு. நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறி போகலாம். முன்னெச்சரிக்கை நன்று.

கன்னி- புதிய தலையிடி தலைதூக்கும். வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாது இருக்கவும்.

துலாம்- புதிய பொருள்களை கொள்வனவுசெய்வதற்கு இன்று நலம் வெளியிடத்துத் தொடர்புகளிலும் நல்ல மாறுதல்கள் தென்படுகின்றது. மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும்.

விருட்சிகம்- அறவழியில் நாட்டம் பிறக்கும். தாராள சிந்தை மேலிடும். எதிர்பார்த்த சுபகாரியமொன்றுக்கு இன்று வழிகோலப்படலாம். மதிப்பு உயரும்.

தனுசு- பொருள் வரவில் புதிய திருப்பம் ஏற்படுகின்றது. முதல்விட்டுச்செய்யும் தொழில் முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்றும் கிடைக்கும்.

மகரம்- ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும். எதிலும் விரக்தினப்போன்மை தென்படும். வேண்டாத நட டிக்கைகள் மூலம் நண்பர்களை பகைத்துக்கொள்ள நேரிடலாம்.

கும்பம்- அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும்.

மீனம்- எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும். மற்றவர்கள் மெச்சும்வண்ணம் கடமையாற்றுவீர்கள். இதயத்துக்கு இதம்அளிக்கக்கூடிய பரிசு கிடைக்கலாம். வேண்டியவர்களின் ஆதரவு பெரும்.

'கூட்டணியினருக்கு பதவி மோகம் கிடையாது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரந்கொடை, வெள்ளி சுபசிங்கா மேற்கண்டவாறு

ரூயல் கல்லூரிக்கிரிக் கெட் கோஷ்டி நாளை யாழ்நகரில்மோதும்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையிலுள்ள கல்லூரிகளின் கிரிக்கெட்கோஷ்டிகளில் இதுவரை தோல்வியைக்காணுதபலம் வாய்ந்த கொழும்புரூயல் கல்லூரி கோஷ்டி நாளை யாழ்ப்பாணம் வருகின்றது.

கொழும்புரூயல் கல்லூரி யாழ்.மத்திய கல்லூரியுடன் 2 நாள் சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டியொன்றில் கலந்து கொள்வதற்காகவே யாழ்ப்பாணம்வருகின்றது. இந்தக் கிரிக்கெட் போட்டி நாளையும் மறுதினமும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கொழும்பு ரூயல் கல்லூரிக் கோஷ்டிக்கு வீரர் ஏ. ஜயவீர தலைமை தாங்குகின்றார். இவர் சிறந்த பந்து வீச்சுவீரரும் துடுப்படி வீரருமாவார். சென்றவருடம் இலங்கை பாடசாலை கிரிக்கெட் கோஷ்டியில் அங்கம் வகித்து பாரதம் சென்று அங்கு பலசாதனைகள் புரிந்தவர் இக கோஷ்டியில் அங்கம் வகிக்கும்பலவீரர்களும், இலங்கைப் பாடசாலைக் கோஷ்டியில் அங்கம் வகித்து பாரதம் சென்றவர்களாவர்

ரூயல் கல்லூரிக்கோஷ்டியில் அங்கம்வகிக்கும்வீரர்களின் விபரம்:- ஏ ஜயவீரா (காப்டன்) டியான் கல்தேரா பி என் ஆர் மெண்டிஸ், ஜகத் பெர்ணான்டோ. பெவர்லி போல், என் ஹெட்டியாராய்சி, உபாலி சமரகே, ஜே தனாயசிங்கம், ஏ எம் பாஸ்குவல், எம் றஹீம், எஸ் லோட்டன்.

யாழ் மத்திய கல்லூரி தாம்மிகவும் பலம்கொண்ட கோஷ்டிஎன்பதை கடந்த சென்றல்- சென், ஜோன்ஸ் போட்டியில் நிருபித்துவிட்டது இக்கோஷ்டியில் சிறந்த துடுப்படி வீரர்களும் வேகம் கொண்ட பந்துவீச்சு வீரர்களும் இருபதினால் ரூயல்-சென்றல் கிரிக்கெட் போட்டி மிகவும் ரசிப்பான ஒரு ஆட்டமாக இருக்குமென கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

யாழ். மத்திய கல்லூரிக்கு வீரர் ஆர். ராஜசிங்கம் தலைமைதாங்குகின்றார். மற்றைய வீரர்களின் விபரம்: எஸ். தங்கேஸ்வரன், ஜி எஸ். ஜீனேகரன், ரி. தயாசிங்கம், கே. ஜெயரட்ணகுமார், ஆர். ரஞ்சிற்குமார், எம். ஜெயக்குமார், எஸ். அபூபக்கர், ஜி. ஆர். ஹண்டி, ஜே கே பிரேமச்சந்திரன், எஸ். ஜெலிங்கம், ரி. மகேந்திரன், டி. ஜே. நையில்ஸ், கே. டி அருளானந்தம்.

5-ம்,6-ம் திகதிகளில்நடைபெறும் இக்கிரிக்கெட் போட்டி இரு நாட்களும் காலை 10-30க்குஆரம்பமாகி மாலை 5-45க்கு முடிவடையும்.
(தே. நி)

உதவிக்கு கூப்பிட்டவர்கள் மோசமாகத்தாக்கினர்களாம்

மாவிட்டபுரம், வெள்ளி

படுமோசமாக இரும்புக்கம்பிகளாலும், கல்லாலும் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒருவர் ஏழாலே தெற்கு சூராவத்தையில்வசிக்கும் சந்திரநாயகம் சூராவத்தையிலுள்ள தமது தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தபோதுதோட்டத்துக் கருகில் காரொன்று நிறுத்தப்பட்டிருந்ததாகவும், அவர் அங்கு சென்ற போது காரை தள்ளிவிடும்படி காரில் வந்தவர்கள் கேட்டதாகவும், அவர் காரை தள்ளச் சென்ற போது இரும்புக்கம்பிகளாலும், கல்லாலும் தாக்கி படுகாயம் விளைவித்ததாகவும் பொலிஸாருக்குச் செய்துபுகாரில் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக விசாரணை நடாத்திய சுன்னாகம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த வி.செல்லையா சந்தேகத்தின்பேரில்இராசரத்தினம், தர்மரத்தினம், செல்வராசா ஆகியோரை கைதுசெய்துள்ளார்.

அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இம்மாதம் 16ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

காதல் விவகார எதிரொலியே இச் சம்பவத்துக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

இடமாற்றம்

முசலி, வெள்ளி

மன்னார் மாவட்டத்தில் விவசாய விஸ்தரிப்பு அதிகாரியாகக் கடமையாற்றிய ஜனுப் எம். சி. எம். முஸ்தப்பா கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இவரது இடத்திற்குரி. என். மாணிக்கவாசகர் நியமிக்கப்

தேவாலய காணியை தரும்படி கோரிக்கை

முசலி, சனி

நானாட்டான் மகாவித்தியாலயத்தை விஸ்தரிக்கும் பட்சத்தில், அம் மகாவித்தியாலயத்துக்கு இடவசதி இல்லாத காரணத்தால் நானாட்டான் மகாவித்தியா

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 4—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாளுசலி, 6-25 சைவநற் சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற் சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியதீதம், 8-30 செய்திச் சுருக்கம்.

334 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5.00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர் (3 வேடங்களில்)
விஜயநிர்மலா - பாலையா
நடித்த

சிரித்த முகம்

யாழ்-வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்—விஜயகுமாரி
நடித்த
செல்வியின் செல்வன்

வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 3-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்

சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்
தில்லானா மோகனாம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி
நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
சுபதினம்

எனவே நான் இதனை வெளிப்படுத்தி எல்லோரையும் வேண்டுவது என்ன வென்றால் மேற்சொல்லிய சத்தியவாக்குச் சீட்டுகளை எவரும், எப்பொறுமதி கொடுத்தும் சாட்டுதல் பெறக்கூடாதென்றும் அவை செல்லுபடியற்றதென்றும்.

சு பேராயிரசிங்கம்
2207

அயர்லாந்தில் தொடர்ந்து குழப்பம்

பெல்பாஸ்ட், ஏப். 3

வட அயர்லாந்தில் தொடர்ந்து கலவரங்கள் இடம் பெற்றுவருகின்றன. நேற்று பிரிட்டிஷ் துருப்புகள் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசி குழப்பங்களை விளைவித்தார்கள் இதில் 5 பொலிசார் காயமடைந்தனர். 20 பேர் கைது செய்யப்பட்டனர். துருப்பினர் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர்.

0 0 0

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30 10-00
பிரிபோயா,போயா 2-30மணி
கலியாணகுமார் - தேவிகா
நடித்த
நெஞ்சம் மறப்பதில்லை

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
ஆனந்தன்-தேவிகா
நடித்த
குபேரதீவு

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Carroll Baker
And
George Maharis
in
SYLVIA
(Color-adults only)
(An exceting Love Story)

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Elvis Presley and
Michele Carey
in
LIVE A LITTLE
LOVE A LITTLE

'கூட்டணியினருக்கு பதவி மோகம் கிடையாது'

சுபசிங்கா

நாரங்கொடை, வெள்ளி

'கூட்டணிக்கட்சிகளில் உள்ள எவருக்காவது அதிகார ஆசையில்லை. அமைச்சர் பதவிகளை வகிக்கவேண்டும் என்ற விருப்பம் இல்லை. கஷ்டப்படும் வறியமக்கள் சுதந்திரமாகத் தங்களுக்குத் தேவையானவற்றை பெற்று மகிழ்ச்சியாக வாழ சோஷலிச அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதே எங்களது குறிக்கோள்.

நாரங்கொடையில் நடைபெற்ற கூட்டணிப்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் சுதந்திரக்கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. ரி ஆர் சுபசிங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாட்டில் நிலவும் சகல பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு ஒரேயொருவழி சோஷலிசமேயாகும். கூட்டணியின் 25 அம்சத்திட்டம் சோஷலிசத்துக்கு வழிவகுப்பதாக அமைந்துள்ளது. இந்த 25 திட்டங்களும் செயற்படுத்தப்பட்டால் நாட்டில் பிரச்சினையென்ற பெயருக்கே இடமிருக்காது. எனவே மக்கள் இந்த 25 அம்சத்திட்டங்களை நன்றாக ஆராய்ந்து அதன் பலாபலன்களை அறிந்து கூட்டணியினருக்கு வாக்களிக்கவேண்டும் எனக் கூறினார்.

திரு. பி. ஏ. ஜயக்கொடி, திரு. எல்.பி.பொடிநிலாமை உடபடப் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

"ஆரம்பத்திலிருந்தே வேலைவாய்ப்பு கிடைக்கும்"

கிரிஎல்ல, வெள்ளி

'எதிர்க்கட்சியினர் மகாவலித்திட்டத்தால் வேலை வாய்ப்பு 30 வருடங்களுக்குப் பின்னரே கிடைக்கும் எனக் கூறுகிறார்கள் இது ஒரு வீண் பேச்சாகும் அவர்களுக்குப் பேசுவதற்கு வேறு ஒரு விடயமும் இல்லை.

கிரிஎல்லவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் மகாவலி திருப்புத்திட்டவேலைகள் ஆரம்பமான கட்டத்திலிருந்து வேலைவாய்ப்பு இருந்து கொண்டேயிருக்கும். திட்ட வேலைகளுக்கு அதிகமானோர் தேவைப்படுவார்கள் இவ்வாறிருக்க எதிர்க்கட்சியினர் 30 வருடங்களுக்குப் பின்னர்தான் வேலைவாய்ப்புக் கிடைக்கும் எனக்கூறுவது சரியானதா? எனக் கேட்டார்.

ஏழுவருட கடுழியம் கொலை வழக்கில்

கோட்டை, வெள்ளி

கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டிருந்த இரு எதிரிகளில் ஒருவருக்கு 7 வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. மற்றவரை விடுதலை செய்யப்பட்டார். கொழும்பு அசைஸ் நீதியரசர் திரு. ஈ. ஆர். பொன்சேகா இத்தீர்ப்பை வழங்கினார்.

இளமுல்லையைச் சேர்ந்த குணதாசா சில்வா, வி. பி. பியதாசா ஆகிய இருவரும் எச், பெருமாள் என்பவரைக்கொலைசெய்ததாக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

குணதாசா சில்வாவுக்கு 7 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

முசலி, சனி

நானாட்டான் மகாவித்தியாலயத்தை விஸ்தரிக்கும் பட்சத்தில், அம் மகாவித்தியாலயத்துக்கு இடவசதி இல்லாத காரணத்தால் நானாட்டான் மகாவித்தியாலயத்துக்கு அருகாமையில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்தைச் சேர்ந்த காணியை மகாவித்தியாலயத்துக்கு தரும்படி நானாட்டான் மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியசங்கம் யாழ்ப்பாண மாவட்ட மேற்காணியாண்டவர் டாக்டர் வண. எமிலியானுப்பிள்ளையைக் கேட்டுள்ளார்.

விவசாய விஸ்தரிப்பு அதிகாரியாகக் கடமையாற்றிய ஜனாப் எம். சி. எம். முஸ்தப்பா கொழும்புக்கு இட மாற்றம் செய்யப்பட்டார். இவரது இடத்திற்கு ரி. என். மாணிக்கவாசகர் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

டாக்டர் மு. வ. நூலகம்

சுழிபுரம், வெள்ளி

வழக்கம்பரை சன சமூக நிலையத்தினர் டாக்டர் மு. வ. நூல்களை மட்டும் கொண்ட ஓர் நூலகத்தை திறந்து வைத்துள்ளனர்.

344 மீ. அண்ட் 61 மீ:

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5.00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 நாளைய சந்தி.

இரவு 6-15 வீணை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 ஐ.நா. சித்திரம், 8 00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப் பிரசங்கம், 10-30 செய்திச் சுருக்கம்.

சிதன சேமிப்புக்கு
வருடம் 9 சதவீத வட்டி
கொடுக்கப்படும்
இச்சேமிப்பை 30 நாள் அறிவித்தலில்
வருடம் 8 சத வீத வட்டியுடன்
எப்பொழுதும் எடுக்கலாம்.
மறுவிபரங்கட்கு:-
தம்பி அன் கோ
வண்ணார்பண்ணை — யாழ்ப்பாணம்

தமிழ், ஆங்கில மொழிகளில்
அச்சு வேலை எதுவாலுலும்
எங்களையும் விசாரியுங்கள்

எமது
வர்த்தக அச்சகப்
பகுதியில்

* கடிதத் தலைப்புகள்
* அறிமுக அட்டைகள்
* பெரிய சிறிய பிரகரங்கள்— பிரசுரித்தல்
* புத்தகம் கட்டுதல்
* புதிய வகைப் பற்றுச்சீட்டுப் புத்தகம்
* பெரிய பதிவுப் புத்தகம்
* கோடடித்தல்

ஆதியன

குறைந்த கட்டணத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஊழியர்கள் திருப்தியான வேலை செய்கிறார்கள்.

சிறந்த சேவையே எமது நோக்கம்

ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)

தொலைபேசி: 389

த. பெ. எண்: 49,
63, சிவன் கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனதிபதி வேட்பாளர் பற்றிய

"முடிவு எடுக்கப்பட்டவிதம் இந்திராவுக்குபிடிக்கவில்லை'

கிரி வழக்கில் சாட்சியம்

புதுடில்லி, ஏப்ரல் 3

'ஜனதிபதித் தேர்வுக்கு யாரைநிறுத்துவது என்று சர்ச்சை எழுந்தபோது, சஞ்சீவரெட்டியை பெரும்பான்மையினர் ஆதரிக்கின்றபடியால் அவரையேஜனதிபதித் தேர்தலில் நிறுத்தலாம் என திரு. நிஜலிங்கப்பா கூறினர். அப்போது முடிவு எடுக்கப்பட்டவிதம் தனக்குப்பிடிக்கவில்லையென திருமதி இந்திரா காந்தி கூறினர்:

ஜனதிபதி தேர்தல் வழக்கில் திரு. கிரியின் சார்பாக சாட்சியமளித்த போட்டிக் காங்கிரஸின் பொதுக்காரிய தரிசி திரு. எஸ். டி. சர்மா கூறினர்.

'ஜனதிபதி விடயத்தில் தேசிய மட்டத்தில் ஒரு பொதுக் கருத்து உருவாக வேண்டுமென்று பிரதம மந்திரி விரும்பினர். பெங்களூர் கூட்டத்தில் சஞ்சீவரெட்டியின்பெயரை வேறுசிலர் பிரேரித்தார்கள். கிரியின் பெயரும், சஞ்சீவரெட்டியின் பெயரும் பிரேரிக்கப்பட்டதால் வாக்கெடுப்பின் மூலம் ஒருவரைத்தேர்ந்தெடுக்கலாம் என்று நிஜலிங்கப்பா கூறினர்' என்றும் சர்மா விசாரணையில் தெரிவித்தார்.

சஞ்சீவரெட்டியின் நடத்தையைக்கண்டிக்கும் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டதா என்று கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு அவர் பதிலளிக்கையில் அப்படிப்பட்ட பிரசுரங்கள் எதையும் தான் பார்க்கவில்லை என்று கூறினர்.

ஜனதிபதித் தேர்தலுக்கு வேட்பாளரைத் தெரிவு செய்த முறைகுறித்து 'இந்த முடிவு கடுமையான விளைவுகளில் கொண்டுபோய் விடுமென்று திருமதி இந்திரா காந்தி கூறினரா என்று கேள்வியொன்று கேட்கப்பட்டபோது இதுமுற்றிலும் தவறு, இதை உறுதியாகச் சொல்கிறேன்' என்று சர்மா கூறினர்.

சங்கீத ரசிகர் மத்தியிலும் தரக்குறைவு நிலவுகிறது

செம்மங்குடி சீனிவாசய்யர் தெரிவிக்கும் கவலை

சென்னை, ஏப். 3

கர்நாடக சங்கீதத்தின் தரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டு வருகிறது என்று சங்கீத கலாநிதி திருசெம்மங்குடி சீனிவாசய்யர் கவலை தெரிவித்திருக்கிறார். 'ஆலாபனை' சங்கீத ரசிகர்கள் வட்டத்தின் ஆண்டுக்கூட்டத்தில் திரு சீனிவாசய்யர் தலைமை வகித்துப் பேசினர்.

பாடகர்கள் மத்தியில் மட்டுமின்றி கேட்பவர்கள்மத்தியிலும் இந்தத் தரக்குறைவு காணப்படுகிறது என்றார் அவர்.

இந்தத் தரக்குறைவு பாடகர்களிடம் மட்டுமின்றி, கேட்பவர்களிடையேயும் காணப்படுகிறது. ஆனால் பழைய கர்நாடக சங்கீதம் மீண்டும் புத்துயிர் பெறும் என்று நம்பிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. இன்றுள்ள சூழ்நிலையில் சங்கீத ரசிகர்களின் வட்டங்களில்தான் கர்நாடக சங்கீதம் வளரமுடியும். 'ஆலாபனை' போன்ற வட்டங்கள் இளம் வித்வான்களுக்கு ஊக்கமளிப்பதின்மூலம்நல்ல தொண்டு செய்கின்றன என்று அவர் கூறினர். இந்த விழா மைலாப்பூர் சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடைபெற்றது.

0 0

லண்டனில் சுடச்சுடகறி

லண்டன், ஏப். 3

பிரிட்டனில் குடியேற்ற வாசிகளின் தொகை அதிகரிக்க, அங்குள்ள நகரங்களிலெல்லாம் கிழைத்தேச உணவளிக்கும் போசன சாலைகள் பல முளைத்துவிட்டன. இப்பொழுது லண்டனில் 'கறி கிளப்' என்றொரு சங்கம் உருவாகி இருக்கிறது.

இந்த 'கிளப்' பின் நோக்கம், விதிகள் எல்லாம் உணவைப் பொறுத்தவை. இதன் நோக்கம் காரமான கறி வகைகளை சுடச்சுட அளிப்பது, இதன் விதிகளின்படி அங்கத்தவர்கள் ஸ்ராண்ட் நகரிலுள்ள இந்தியக் கிளப்பில் ஒவ்வொரு மாதத்தின் கடைசிப் புதன்கிழமை கூட வேண்டும். அங்குகிளப்பின் பிரதம சமையல் காரர் திரு பி. ஜி. ராமலிங்கம் சுவை பட ஆக்கி வைத்திருக்கும் சூடான, காரமான கறிவகைகளை வயிறார உண்ணவேண்டும்.

ஸ்ராண் நகரிலுள்ள வர்த்தகத் துறையினர் சிலர் சேர்ந்து உருவாக்கிய இவ் வினோதமான கிளப்பின் மாதாந்த விருந்தொன்றிற்கு 50 பேருக்குக் குறையாமல் வருகின்றனராம். அத்துடன் அங்கத்தினர் தொகையும், அதிகரித்துக் கொண்டே வருகிறதாம்.

புதிய பட்டதாரிகளும் பதிவு செய்யலாம்

கோட்டை, வெள்ளி

சமீபத்தில் சித்தியெய்திய பட்டதாரிகளும் தொழில் வாய்ப்புப்பெற விண்ணப்பிப்பதற்கு பட்டதாரிகள் தொழில்காண்பணியகத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது என பட்டதாரிகள் தொழில்காண்பணியகத்தின் அதிபர் திரு. ஏ பி. கல்கடுவ தெரிவித்துள்ளார். இப்புதியபட்டதாரிகள்மேற்படி பணியகத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - சிரியா எல்லையில் உக்கிரமான போர்

இருதரப்பிலும் பலத்தசேதம்

டமாஸ்கஸ், ஏப்ரல் 3

இஸ்ரேல்—சிரியா எல்லைப் பிரதேசத்தில் நேற்று இருதரப்பினருக்கு மிடையில் மிக்மோசமான சண்டை நடைபெற்றது.

1967-ம் ஆண்டுக்குப் பின் இஸ்ரேலியருக்கும் சிரியருக்குமிடையில் இம்மாதிரி சண்டை நெடுநேரமாகவோ பயங்கரமாகவோ நடை பெற்றதில்லை என்று கருதப்படுகின்றது.

இஸ்ரேலியர் தொடர்ந்து யாகக் சிடைக்கவில்லை. இடு சிரியா நிலைகள் மீது நடத்தி தரப்பிலும் பலத்த உயிர்ச் வந்த தாக்கு தல்களுக்குப் சேதங்கள் ஏற்பட்டிருக்க பதிலடி கொடுக்குமுகமாக வேண்டுமென்றும் அஞ்சப் சிரியர்கள் நேற்று இஸ்ரேலி படுகின்றது. யர் நிலைகள் மீது மூர்க்கமான தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கு மிடையிலான எல்லைப்பிரதேசத்தில் நடைபெற்ற இம்மோதலின் போது, விமானங்களையும், பீரங்கிகளையும் கொண்டு சிரியா படையினர் இஸ்ரேலியர் நிலைகளை அடித்துப்புடைத்ததாக அறிவித்தனர். ஒருநாள் முழுவதும் நீடித்த இச்சண்டையில் ஒரு விமானத்தை இழந்ததாக இஸ்ரேலியர் ஒப்புக்கொண்டனர்.

இஸ்ரேலியருக்கு சிரியா படையினர் பலத்த சேதங்களை ஏற்படுத்தியிருக்கவேண்டுமென்று கருதப் படுகின்றது. ஆனால் அவை பற்றிய விபரங்கள் உடனடி

பாதுகாப்பு மண்டலம் இல்லாமலிருந்தால், சூரிய மண்டலத்திலுள்ள மரணுபாய மான கதிரியக்கத் தாக்குதல் மனித உயிர்களுக்குத் தீங்கு குண்டாக்கியிருக்கும் என்று மணிலா வானியல் நிலைய டைரக்டர் டாக்டர் எனெஸ்லி கூறினர்.

படிக்கப்போகின்றது என்று இஸ்ரேலிய ராணுவத் தளபதி டெல் அவிவில் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

சிரியா நடத்தியுள்ள தாக்குதல்களுக்கெதிராக இஸ்ரேலியர் உடனடியாகவே பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்கப் போவதை இது காட்டுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

யு. எஸ்.-ரஷ்ய பேச்சுக்கள்

சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கு மிடையில் போர்நிறுத்த எல்லைப் பகுதியில் கடுமையான சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளையில், மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்துவது சம்பந்தமாக சோவியத் யூனியனுக்கும், அமெரிக்காவுக்குமிடையில் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அமெரிக்காவிலுள்ள சோவியத் தூதரகத்தில் அமெரிக்க உதவி ராஜாங்க மந்திரி ஒருவர் சோவியத் தூதரைச்சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறார்.

பயங்கரவாதிகளின் நிபந்தனைகள் நிறைவேறுது

கடத்தப்பட்ட தூதுவரின் கதிஎன்னவாகும்?

கௌத்தமாலா, ஏப்.3

கடத்திச் செல்லப்பட்ட மேற்கு ஜேர்மன் தூதர் கவுன்ட் கார்ல் என்பவரை விடுதலை செய்வதற்கு தீவிரவாதிகள் தெரிவித்த நிபந்தனைகளை கௌத்தமாலா அரசாங்கம் மறுத்துவிட்டது.

தூதுவரைக் கட்த்திச் சென்றவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கமுயற்சி எடுக்க வேண்டாமென்றும், அப்படி தேடினால் கடத்தப்பட்ட தூதுவர் கொல்லப்படுவார் என்றும் தீவிரவாதிகள் அறிவித்திருந்தனர். அத்துடன், காவலில் வைக்கப்பட்டுள்ள தங்களின் சகாக்களை விடுதலை செய்யும்படியும் அவர்கள் கேட்டிருந்தனர். ஆனால் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு கௌத்தமாலா அரசாங்கம் மறுத்துவிட்டதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறின. இனி கடத்தப்பட்ட தூதுவரின் கதி என்னவாகும் என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை.

சூரிய மண்டலத்தில் திடீர் கதிர்வாணம்

மணிலா, ஏப். 3

சூரிய மண்டலத்தில் சில தினங்களுக்கு முன், முன்பின் கண்டிராத மிகப்பெரிய கதிர்வாணம் திடீரென்று தோன்றியது. சூரியமண்டலத்தின் சக்தி திடீரென்று வெடித்ததால் ஏற்பட்ட வாணவேடிக்கைஇது. இதன் விளைவாக கீழ் அலைவரிசைகளில் உள்ள ரேடியோக்கள் வாயடைத்துப் போயின ஒரு மணிநேரம் ஒலிபரப்பு அலை இயக்கம் நின்றுபோயிற்று என்று வானியல் அறிவிப்பு நிலையம் கூறியது.

சூரிய மண்டலத்தில் குமுறல் ஆரம்பித்தது. சூரியக் கதிர்கள் திடீரென்றுவெடித்து, மத்தாப்பு வாணம் பெரிய அளவில் உருவெடுத்தது. இதனின்றும் எழுந்த சக்திவாய்ந்த கதிரியக்க அணுக்களும், "புரோடான் களும்" பூமியின் காற்று மண்டலத்தைத் தாக்கின. சூரியன் பெரும்பாலும் நீர் வாயு அணுக்களினுல் அமைந்துள்ளது. இதற்கான வித்துக்கள் புரோடான்கள். சூரியக் கதிர்கள் இடியதிர்ச்சியை மணிலாவிலுள்ள வானியல் ஆய்வுநிலையரேடியோ - தொலை நோக்கி மூலம் கண்டுபிடித்தனர்.

இக்கதிர்கள் வெடித்தன சக்தி 36000 யூனிட்டுகள் என்று வானியல் டைரக்டர் டாக்டர் ஜேம்ஸ்என்னெஸ்லி கூறினர். சூரிய மண்டல மத்திய ரேகைக்கு அருகிலுள்ள சூரியப் புள்ளிகளில் 70 சதவிகிதம் கதிரொளி வாணத்தின் ஒளியில் தெரிந்தன அவ்வளவு சக்தி வாய்ந்த சூரியக் கதிர்வாணம் அது.

பூமியைச் சுற்றியுள்ள

வங்கி தேசியமயத்தை எதிர்த்து

விஷமப்பிரசாரத்தை எவரும் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோழைத்தனம் என்? மேடைக்கு வரவும்'

— பிரதமர்டட்லி

கிரியல, வெள்ளி

'ஏதாவது கூறவேண்டுமானால் நான் நிற்கும் மேடையில் ஏறிநின்று கூறவும். அதைவிட்டுவிட்டு ஒதுங்கிநின்று கோழைத்தனமாக விமர்சனம் செய்யவேண்டாம்' என்று பிரதமர் டட்லி சேனநாயக்க எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொண்டார்.

கிரியலவில் நடைபெற்ற ஐ.தே.க. கூட்டமொன்றில் பேசுகையில் பிரதமர் டட்லி சேனநாயக்க மேலும் கூறியதாவது:

'நாங்கள் அவர்களுடன் ஒத்துழைக்கத் தயாராகவே இருக்கிறோம். ஆனால் அவர்கள் எங்களுடன் ஒத்துழைக்க முன்வரவில்லை. அவர்கள் எங்களுடன் ஒத்துழைக்க முன்வந்தால் நாங்களும் அவர்களுடன் ஒத்துழைக்கத் தயாராகவே இருக்கிறோம்.

நாங்கள் அவர்களுடன் செய்து கொள்ளவில்லை. அப்படி இரகசிய ஒப்பந்தம் செய்திருந்தால் பட்டிருப்பு தொகுதியில்

விலாநோகச்சிரித்து ஏளனம் செய்த மொரார்ஜி இப்போது எங்கே?

தமிழ்நாடு முதலவர் கேட்கிறார்

சென்னை, ஏப். 3

"வங்கிகளை தேசியமயமாக்க வேண்டும் என்று நான்டில்லியில் கூறியபோது ஏளனமாக விலா நோகச் சிரித்து எதிர்த்துப்பேசினார். அப்போதைய நிதிஅமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய். ஆனால் அப்படி மறுத்துப்பேசிய அவர் இப்பொழுது மந்திரிப்பதவியிலேயே இல்லை."

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கூறினார். தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாளில் அண்ணாசிலை திறப்பு விழாவில் அவர் பேசினார். திரு. கருணாநிதி மேலும் கூறியதாவது:

அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்ட இந்தக் கழகம் சோரம் போகாது-சோடை போகாது என்பதற்கு அண்மையில் நடந்த ஓர் எடுத்துக்காட்டை (டெல்லிமேல்சபைதேர்தல்) நண்பர் செழியன் எம். பி இங்கே சுட்டிக்காட்டினார்.

அகில இந்தியாவே எதிர்பார்த்தது ஏன் அனைத்து உலகத்திலே இருக்கின்ற அரசியல் தெரிந்தவர்களெல்லாம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அன்றைய மாலை நேரத்துச்செய்தி- தி மு. கழகம் மாத்திரம் கொஞ்சம் வீரல் அசைத்திருந்தால்- என்று வந்திருந்தது

நாம் வெற்றிபெறுவதற்கு 31 வாக்குகள்போதும் இலட்சிய நடிகர் ராஜேந்திரனும் டி. கே. சினிவாசனுக்கும், காஞ்சிகல்யாணசுந்தரத்திற்கும் அளித்த வாக்குகளே 33 ஆகவோ 34 ஆகவோ ஆக்கிக்கொள்ளாமல்- 32 என்ற அளவிலே நிறுத்திக்கொண்டு, மிச்சமிருக்கின்ற ஒவ்வொரு வாக்கினையும் ஒரு நாலந்து வாக்குகளைச் சேர்த்து சுப்பிரமணியத்திற்கு அளித்திருந்தால், அவர் இந்தியாவினுடைய நிதி அமைச்சராகக்கூட ஆகியிருப்பார்.

உறுதி தவறுது

ஆனால் தி. மு. கழகம் எதிலும் உறுதியாக இருக்கும். தி மு கழகம்- செழியன் சுட்டிக்காட்டியதைப் போல் கண்டனக்கணைகளைப் பார்த்து அஞ்சாது அதே நேரத்திலே கனிவான புன்னகையால் கவரப்பட்டு தன் கொள்கைகளைப்பறிகொடுக்காது என்பதற்கு ஒரே உதாரணம் டில்லி மேல்சபை தேர்தலின் முடிவுஎன்பதனை நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும்:

முன்னேற்றமான காரியங்கள் மத்திய அரசில் இந்திரா அரசு செய்யுமானால் அதை வரவேற்றிருக்கின்றோம்.

விலா நோகசிரித்தார்

உங்களுக்கு நன்றாகத்தெரியும் சென்ற ஆண்டு நான் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், டெல்லியிலே நடைபெற்றதேசியவளர்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ளச்சென்றிருந்தேன். பல முதல் அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாடு- நானும் நிதி அமைச்சர் மதியழகனும் சென்றிருந்தோம்

அந்த மாநாட்டிலே பேசுகிற நேரத்திலே நான் தெளிவாகச் சுடடிக்காட்டினேன். நீண்ட நெடுங்காலமாக தி. மு. கழகத்தினுடைய கொள்கை, இந்தியாவிலே இருக்கிற பெரிய பாங்கிகளை எல்லாம் தேசியமயமாக ஆக்க வேண்டுமென்ற கொள்கையாகும். ஆகவே அந்தக்கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் சார்பில் இந்த தேசிய வளர்ச்சிக்குழு கூட்டத்தில் நான் வலியுறுத்த விரும்புகின்றேன். பாங்கிகளை எல்லாம்- இந்தியாவிலே இருக்கின்ற பெரிய பாங்கிகளை எல்லாம் தேசியமயமாக ஆக்குகின்ற நிலைக்கு நீங்கள் தீர்மானம் கொண்டு வாருங்கள் என்று நான் சொன்னேன்.

உடனடியாக விலாநோகச் சிரித்தபடி அதை எதிர்த்துப் பேசியவர் மொரார்ஜி தேசாய். அதற்கு ஆதரவு தந்தவர் இந்திரா காந்தி. இரண்டு பேருமே நாங்கள் தமிழ் நாட்டு முதல் அமைச்சருடைய கருத்தை ஏற்றுக் கொள்ள இயலாது என்று சொன்னார்கள்.

ஆனால் இன்றைக்கு உள்ள நிலைமை என்ன? முதலிலே மறுத்த மொரார்ஜி தேசாய் அமைச்சரவையிலே இல்லை. தாமதமாக மறுத்த திருமதி இந்திரா காந்தி பிரதமராகத் தப்பித்துக் கொண்டார்கள்.

அவர்கள் 14 வங்கிகளை தேசியமயமாக ஆக்கினார்கள். எங்களுடைய முற்போக்கு கொள்கை ஒன்று இன்றையதினம் செயல் வடிவமாக ஆகிறது என்கின்ற காரணத்தால் தி. மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திரா அரசுக்கு மிகவும் இக்கட்டான நேரத்தில் ஆதரவு தந்தார்கள்.

கங்கையும் காவேரியும்

அடுத்துச் சில மாதங்களுக்கெல்லாம் மத்திய கல்வி அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் சென்னைக்கு வந்தார். இந்திப் பிரச்சார சபையில் அவர் பேசினார். பேசும் பொழுது அவர் கூறியதாவது: கங்கையும் காவேரியும் கலப்பதைப் போல் இந்தியும் தமிழும் ஒரு காலத்தில் கலக்கும் என்று சொன்னார்.

மறுநாளே திருவொற்றியூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நான் அவருக்குப் பதில் அளித்தேன்.

இந்திரா காந்தியினுடைய அரசை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு சில முற்போக்கான காரியங்களுக்காக ஆதரிக்கிறோம் என்பதையே நீங்கள் ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, இந்தியை நுழைக்க எண்ணுகிறீர்கள்.

வி. கே. ஆர். வி. ராவ் அவர்களே, மத்திய அமைச்சரே உங்களுக்கு நான் சொல்லுகின்றேன் எச்சரிக்கை செய்கின்றேன். நாலு கோடி தமிழர்கள் சார்பாக சொல்கின்றேன், எங்களுடைய இந்தி எதிர்ப்பு மொழிப் போராட்ட வரலாற்றின் சார்பாக சொல்கின்றேன். தீக்குளித்துச் செத்த எட்டுப் பேர்கள் சார்பாக சிறையிலே சித்திரவதைகளைத் தாங்கிய பல்லாயிரக் கணக்கானவர்கள் சார்பிலே சொல்கின்றேன். காவேரியும் கங்கையும் கலக்கலாம்; ஆனால் தமிழும், இந்தியும் கலக்காது என்று மறுநாளே அவருக்கு பதில் அளித்தேன்:

ஆகவே தி. மு. கழகம் எங்களுடைய கொள்கையில் இந்தக் கழகத்திற்கே இருக்கின்ற லட்சியத்தில் பிடிப்போடு இருக்கும் மாற்றருக்கு அது விலை போகாது. நிலை மாறுது என்ற இத்த எடுத்துக்காட்டைவிட உங்களுக்கு வேறு எடுத்துக் காட்டு தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

எஸ். எஸ். ஆர். வெற்றிக்கு பாராட்டு

டில்லி மேல்சபைக்கு வெற்றி பெற்றுள்ள நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனுக்கு பாராட்டு அளிக்கப்பட்டது. சென்னை 98-வது வட்ட தி. மு. கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் முதல் அமைச்சர் திரு. கருணாநிதி பேசுகையில் டில்லி மேல் சபைக்கு போட்டியிட்டு இந்திரா ஆதரவு தலைவர் திரு. சுப்பிரமணியம் தோல்வியுற்றதைக் குறிப்பிட்டுப் பேசினார்,

அவர் கூறியதாவது:

டில்லி மேல்சபை தேர்தல் மூலம் தி. மு. கழகத்தின் கட்டுக்கோப்பு, கட்டுப்பாட்டு உணர்ச்சி, கண்ணியம் அகில இந்தியாவுக்கும் தெரிவிக்கப்பட்டது.

தி. மு. கழகத்தின் கட்டுக் கோப்பு பலமுறை அகில இந்தியாவிற்குத் தெரிவிக்கப் பட்டதெனினும் இந்தமுறை அது தெரிவிக்கப்படுவதற்கு உதவியாக இருந்தவர் சுப்பிரமணியம்தான்.

அவர் போட்டியிடாமல் இருந்திருந்தால் தி. மு. கழகத்தைச் சார்ந்த ஐவரும் சிண்டிகேட்டைச் சார்ந்த ஒருவரும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பார்கள்!

அவர் போட்டியிட்டதனால் தி. மு. கழகத்தின் கட்டுக் கோப்பு அகில உலகிற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சுப்பிரமணியம் வெற்றி பெற்றிருந்தால் மத்திய அரசின் நிதியமைச்சராக்கப் பட்டிருக்கலாம்.

ஆகவே தோற்றது வெறும் சுப்பிரமணியம் அல்ல; மத்திய அரசின் நிதியமைச்சராக உயர வேண்டியவர் தோற்கடிக்கப் பட்டிருக்கிறார்.

தீர்மானம் தோல்வி

புதுடில்லி, ஏப்ரல். 3

ஆந்திரா முதலமைச்சர் திரு பிரமானந்தரெட்டிமீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது. எதிர்த்து 150 வாக்குகளும் ஆதரித்து 61 வாக்குகளும் கிடைத்தன.

ஜப்பானுக்கு தமிழக வாழைப்பழம்

சென்னை, ஏப்ரல் 3

ஜப்பானுக்கு வாழைப் பழம் அனுப்பப்போகிறது தமிழக அரசு. தமிழக கூட்டுறவு அமைச்சர் திரு ஆதித்தனார் இந்தத் தகவலைத் தெரிவித்தார். தூத்துக்குடியிலிருந்து இந்த வாழைப் பழம் அனுப்பப்படவுள்ளது.

இலங்கைவரும் பிரிட்டிஷ் போதனாசிரியர்கள்

லண்டன், ஏப்.3

சுமார் 200 பிரிட்டிஷ் போதனாசிரியர்கள் தமது விடுமுறை காலத்தில் இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ள விருக்கிறார்கள். இந்த சுற்றுப் பிரயாணத்தின்போது இவர்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள ஆசிரியர்களுக்கு, ஆசிரிய பயிற்சி வகுப்புகளை நடாத்துவார்கள். இவர்கள் 25 நாடுகள் வரை சென்று மொத்தம் 3, 000 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள்.

இந்த போதனாசிரியர்கள் குழுவொன்றுவிரைவில் இலங்கைக்கும் விஜயம் செய்து இங்கு பயிற்சி வகுப்புக்களை நடாத்தும். புதிய உத்திகளை கையாண்டுகல்விபோதித்தல் குறிப்பாக விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களைப் புகட்டும் புதிய முறைகள் பற்றிஇந்தப்பயிற்சி வகுப்புகளின் போதுவிளக்கப்படும்.

முழங்காலில் முறிவு

ஹைதராபாத், ஏப்ரல் 3

தெலிங்கானா பிரதேசகாங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. கொண்டாலக்ஷ்மன் பாபுஜி, புதிதாகக்கட்டப்படும் தியேட்டர் ஒன்றைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போது கவறிவீழ்ந்ததில் முழங்காலில் முறிவு ஏற்பட்டுள்ளது. மூன்று வாரங்களுக்கு ஓய்வு எடுக்குமாறு அவருக்கு யோசனைதெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் காயம்

முசலி, வெள்ளி

ஒரு தியேட்டரில் நடைபெற்ற கோஷ்டி கைகலப்பில் பெரியபுள்ளச்சி பொற்கேணியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காயமுற்று முருங்கன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபட்டார். விசாரணை நடைபெறுகிறது.

"யு. என். பி. ஏகாதிபத்தியத்தின் உள்ளூர்ப்பிரதிநிதிகள்"

— டாக்டர் கொல்வின்

அனுராதபுரம், வெள்ளி

'ஏகாதிபத்தியவாதிகளின் உள்ளூர் பிரதிநிதிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதனை முறியடிக்கக் கூடிய வல்லமைமிக்க கூட்டணிக்கும் இடையில் நடக்கும் மோதல் தான் இந்தப்பொதுத் தேர்தல்'' என்று லங்காசமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரும் அகலவத்தை முன்னாள் எம். பி. யுமான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறினார்.

அனுராத புரத்தில் சுதந்திரக்கட்சி மாவட்டக்கிளை திறப்பு விழாவில் அவர் பேசுகையிலேயே இவ்வாறு சொன்னார்.

அடுத்த ஆசாங்கம் எது என்பதை நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பு பெண்களையும் இளைஞர்களையுமே சாரும். என்றும் டாக்டர் கொல்வின் கூறினார்.

''யு. என். பி. யிலுள்ள மிகச் சொற்பமானோர் கோடிக்கணக்கில் பணத்தைப்பதுக்கி வைத்திருப்பவர்கள். இவர்கள் முதலாளித்துவவாதிகள் இவர்கள் ஆட்சிக்கு வருவதன் மூலம் தமது 'பாக்கெட்டுக்களை நிரப்பிக் கொள்ளுகிறார்களே தவிர இந்த நாட்டில் வாழும் லட்சோபலட்ச ஏழைமக்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லையே என்று குறிப்பிட்டார்.

காலி முன்னாள் மேயர் டபிள்யூ. டி. எஸ். அபயகுணவர்த்தனா பேசுகையில் பொதுமேடைகளில் பொது மக்களுக்கு வாக்குறுதிகளை அளித்த யு. என். பி. பதவிக்கு வந்ததும் முதலாவித்துவ வாதிகளின் நலன்களையே பாதுகாத்தனர்என்று சொன்னார்.

கள்னி முன்னாள் எம் பி திரு ஆர் எஸ் பெரேரா உட்பட மற்றும்பலரும்பேசினர்.

.....

'கல்விமுறையை மாற்றி அமைப்போம்'

நாத்தாண்டியா, வெள்ளி

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்குப்பின் கூட்டாட்சியினர் அரசாங்கத்தை அமைத்ததும் தற்போதைய கல்வி முறை மாற்றியமைக்கப் பட்டு முந்திய தரத்துக்கு கொண்டுவரப்படும். தேசிய அரசாங்கத்தின் தற்போதைய கல்விமுறையினால் மாணவர்களும் பெற்றோரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

நாத்தாண்டியாவில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனப் பதியூதீன் மஹ்மூத் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. புரோட்டஸ்திஸேரா திரு. ரத்னே தேசப்பிரியா சேனநாயக்கா ஆகியோரும் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஜெபத்தில் அலட்சியம் ஆகாது. மானசீக ஜெபம் மலையையும் அசைக்கும். —அன்னை

ஈழநாடு

Eelanadu (National Tamil Daily)
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 22-ந் திகதி (4-4-70)

கட்சிகள் அங்கீகாரம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அங்கீகாரம் கோரி மனுச்செய்திருந்தபதினைந்து அரசியல் கட்சிகளினதும் மனுக்களை தேர்தல் கமிஷனர் நிராகரித்துவிட்டார். அதற்கு அவர் சில காரணங்களையும் தெரிவித்திருக்கிறார். சட்டரீதியாக அவர் ஆதாரமும் காட்டியிருக்கிறார். அவரைப் பொறுத்தவரையில் இந்தக் கட்சிகளின் மனுக்களை நிராகரித்ததில் அவர்மீது குற்றம் சொல்ல முடியாது,

ஆகக் குறைந்தது ஐந்து வருடங்களுக்காவது அரசியல் கட்சியாக இயங்கியிருந்தால்தான் ஒருகட்சியை அங்கீகரிக்க முடியுமென்றும் அப்படியில்லாவிடில் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் இருவராவது ஒரு கட்சியில் அங்கத்துவம் வகித்தால்தான் அந்தக் கட்சியை அங்கீகரிக்க முடியுமென்றும் சட்டம் கூறுகிறதாக தேர்தல் கமிஷனர் அலுவலகம் கூறுகிறது

நேற்றிருந்த நிலைமை இன்றிருப்பதில்லை. காலம் மாறிக்கொண்டேயிருக்கிறது. காலமாற்றம் என்பது சாதாரண மாற்றமல்ல கடுகதி மாற்றமென்றே சொல்லலாம். இந்நிலையில் ஐந்து வருடங்களுக்கு முன்னரே ஆரம்பித்துத்தான் ஓர் அரசியல் கட்சியோ ஓர் இயக்கமோ பணிபுரியவேண்டுமென்பதில்லை. ஐந்து வருடங்களல்ல ஐம்பது வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த இயக்கங்களும் கட்சிகளும் கூட கருத்து வேறுபாடு, கொள்கை வேறுபாடு காரணமாகவும் வேறு காரணங்களுக்காகவும் சீர்குலைந்து சின்னாபின்னமாகலாம்; சிதறுண்டு போகலாம். புதிய இயக்கங்களும் கட்சிகளும் தோன்றலாம். அவை மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறலாம். மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்ற ஒரு கட்சியையோ, ஓர் இயக்கத்தையோ சட்டத்தைக் காட்டி அங்கீகரிக்க மறுத்தால் சட்டத்துக்காக மக்களா மக்களுக்காக சட்டமா என்ற கேள்வி எழுகிறது.

சட்டத்தை ஆக்குபவர்கள் யார்? ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கையை உயர்த்தினால் எதுவும் சட்டமாகலாம் என்பது ஜனநாயகஆட்சி அமைப்புமுறை, புதிய கட்சியோ இயக்கமோ தோன்றக்கூடாதென்றும் ஆட்சி பீடத்தில் அமர்வதற்கும் நாட்டுக்கு வழிகாட்டுவதற்கும் தங்களைத் தவிர வேறு யாரும் வரக்கூடாது என்றும் கருதும் ஆட்சிமன்றத்தில் பெரும்பான்மைப் பலமுள்ள ஒரு கட்சி தீர்மானித்தால் அதுதான் வேதவாக்கு என்று கொள்வதானால் ஜனநாயகத்தின் மதிப்பு என்ன; மக்கள் ஆட்சியின் மகிமை என்ன?

ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் இருவர் அங்கம்வகித்தால்தான் ஒரு கட்சியை அங்கீகரிக்கலாமென்றால் கட்சி விட்டுக் கட்சி மாறுவதையும் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்படுவதையும் தான் நமது நாடு விரும்புகிறதா? இந்தியாவில் எண்பது ஆண்டுகளுக்கு மேலாக சீரும் சிறப்புமாக வளர்ந்த இந்திய தேசியகாங்கிரஸ் கட்சிவிட்டு கட்சிமாறும் மனப்பான்மை காரணமாகவும் வேறு காரணங்களுக்காகவும் சின்னாபின்னப்பட்டு அங்கு தேசீய ஐக்கியமே சீர்குலைந்து நாசமாகியிருப்பது உலகமே அறிந்த உண்மை.

இவற்றையெல்லாம் நன்கு அறிந்தும் உணர்ந்தும் இப்படியான சட்டவிதிகளை உருவாக்கவேண்டும்.

ஒரு சில கட்சிகள்தான் நாட்டை ஆளவேண்டும் என்பதோ, மக்களுக்கு வழிகாட்டவேண்டுமென்பதோ நியாயமாகாது. இப்போது இதைத் திருத்தமுடியாவிட்டாலும் இனியாவது இதைத் திருத்தித்தானாக வேண்டும்.

பேட்டி கட்டுரை (1)

ஆட்சிமன்றம் போய் சாதித்தது என்ன?

வ. நவரத்தினம் விளக்கம்

ஊர்காவற்றுறைத் தொகுதியின் ஆட்சிமன்ற உறுப்பினராக 1963-ம் ஆண்டு தொட்டே, தொடர்ந்து பதவி வகிப்பவர் திரு. வ. நவரத்தினம். 1963-ம் ஆண்டு, திரு. வி. ஏ. கந்தையா காலமானதைத் தொடர்ந்து நடைபெற்ற உபதேர்தலிலும், 1965-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் தமிழரசுக்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியைத் தேடிக்கொண்டவர்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதா மீது இவருக்கும் தமிழரசுக்கட்சித் தலைமைப் பீடத்திற்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். அதற்குப் பின்னர் ஆட்சிமன்றத்திலே எதிர்க் கட்சி ஆசனங்களில்அமர்ந்து சுயேச்சையாளராகவே செயல்பட்டார். அண்மையில் 'ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம்' என்ற பெயரில் தனிக்கட்சியொன்றை ஆரம்பித்து, அதன் சார்பில் நான்கு வேட்பாளர்களையும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வைத்துள்ளார்.

திரு. வ. நவரத்தினம் அமைதியானவர்; பழகுவதற்கு இனியவர். சிறப்பான பேச்சுவன்மைஉடையவர் என்று சொல்வதைவிட சிறந்த செயல்வீரர் என பெயரெடுத்தவர் என்பதே சாலப் பொருந்தும். 'தமிழரசுக்கட்சியின் மூளை' என்று வர்ணிக்கப்பட்டவர்; தமிழரசுக்கட்சியின் செல்வாக்கு உச்சக்கட்டத்தில் இருந்தகாலத்தில் அதன் செயல்திட்டங்களை வகுப்பதில் பெரும் பங்குகொண்டவர் என்பதை இவரை எதிர்ப்போரும் ஏற்றுக்

தமிழ்ப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து, கடந்த ஐந்தாண்டு காலப் பதவிக்காலத்தில், தங்கள், தங்கள் தொகுதிமக்களுக்கு என்னென்ன சேவை செய்திருக்கிறார்கள் என்பதைக்கேட்டறிந்து, இந்தச்சாதனைப்பட்டியல்'களை மக்கள் மன்றத்தில் சமர்ப்பித்து, குறிப்பாக அந்த அந்தத் தொகுதி மக்களும் பொதுவாக தமிழ்ப்பெருங்குடி மக்களும் அவற்றை ஆராய்ந்து, விவாதித்து தெளிவேற்படுத்திக்கொள்ள வழிசெய்யும்விதமாக பேட்டிக் கட்டுரைத் தொடரொன்றை எழுதவேண்டுமென்ற என் நீங்கா ஆவலின் விளைவே இந்தப்பேட்டிக்கட்டுரை.

பேட்டி: பெரி சுந்தரலிங்கம்

னென்ன செய்திருக்கிறீர்கள்?'' என்ற அடுத்தகேள்வியைக் கேட்டதும், சற்று நேரம் சிந்தித்து விட்டு, நீண்ட பெருமூச்சுடன் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

இருவிதக் கடமைகள்

''தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை இரண்டு விதமானது. முதலாவதாக, இனரீதியாகத் தமிழ் மக்களுடைய உரிமைகளை பாதுகாத்துக்கொண்டு தமிழர்கள் என்ற காரணத்தால் தமிழ் மக்களுக்கு நேரக்கூடிய ஆபத்தான சட்ட திட்டங்களையும் அரசாங்க நடவடிக்கைகளையும் எதிர்த்தோ, கண்டித்தோ இன உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டிருப்பது

''இரண்டாவதாக தன்னைத் தெரிவுசெய்து அனுப்பிய தொகுதி மக்களின் தேவைகளையும் தொகுதி அபிவிருத்தி முன்னேற்றம் ஆகியவற்றை இயன்றளவு பூர்த்திசெய்வது.

என்னைப் பொறுத்தவரை நான் முந்திய கடமையை கைநழுவவிடாமல் பிந்திய கடமையை நிறைவேற்றியுள்ளேன் என்பதுதான் மகிழ்ச்சிகரமான

''தமிழ் மக்களுக்கு தான மசோதாக்களைத்

ன்றுக்கு ஒருமுறை தான் பயணம் செய்யமுடியும் ஆனால் இப்பொழுது நாளொன்றுக்கு மூன்று முறை பயணம் செய்யமுடியும் இதுவரை காலமும், ஊர்காவற்றுறைக்கு மின்சாரவசதி கிடையாது. நான் எம்.பி. யான பின்னர்தான் ஊர்காவற்றுறை பட்டின சபை எல்லைக்குள் மின்வசதி ஏற்படுத்தி இப்பொழுதுமுற்றுப்பெறும் தறுவாயிலிருக்கிறது.

அடுத்து நாரந்தனை கி.ச. எல்லைக்குள்ளும் மின்சாரம் விநியோகிக்க 2 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டு வேலை ஆரம்பமாகும் தறுவாயில் உள்ளது

அதேபோல் வேலணைக்கும், புங்குடுதீவுக்கும் மின்சாரசபையால் நேரடியாகக் கொடுக்கும் திட்டவேலைகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

தொகுதி பூராவும் ஏறக்குறைய 25 பாடசாலைகளுக்கு புதிதாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. வட பகுதியிலேயே எனது தொகுதியில்தான் - வேலணையில் ஓர் பள்ளிக்கூடம் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இப்படி நீண்டதொரு பட்டியலைச் சொல்லிக் கொண்டே போன திருவா

ளுமன்றத்திலோ, என்றோ ஒருநாள் சிங்கள மக்களின் இரு பெரும் கட்சிகளிலே ஏதாவது ஒன்று, இந்த நாட்டைக் குடியரசாகப் பிரகடனப்படுத்துவது பற்றி நடவடிக்கை எடுப்பார்கள என்பது நிச்சயம். அந்தச் சந்தர்ப்பத்தைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

கே: குடியரசாகப் பிரகடனப் படுத்துவதை எதிர்க்கவேண்டும் என்று சொல்கிறீர்களா?

ப: என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்பொழுது சொல்கிற நிலையில் இல்லை.

கே: நீங்கள் சொல்லுகிற இந்தச் சந்தர்ப்பத்தையும் தக்கமுறையில் பயன்படுத்தும் பொறுப்பு, அன்றைய நிலையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளைப் பெரும்பான்மையாகப் பெற்றுள்ள ஒரு கட்சியிடம் தானே தங்கியிருக்கும்?

ப: அப்படியில்லை. எண்ணிக்கையில் அதிகமானோர் இருக்க வேண்டுமென்பதில்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்த நான்கு பேர் இருந்தாலே போதுமானது.

கே: ஒருவர் மட்டும்வந்தாலும் போதும் என்று சொல்லுகிறீர்களா?

ப: இல்லை.

கே: குறிப்பிட்டகட்சியின்

விளக்கத்தைத்தான் சொல்லிப் பதவி துறக்காமலிருந்தார்கள். அவர்கள் நடந்ததும் சரி, நான் நடந்ததும் சரி அவர்களுக்கொருநீதி: எனக்கொரு நீதி அல்ல. இதுவே நான் விளங்கிக் கொள்ளுகிற பாராளுமன்ற சம்பிரதாயம்

கே: விலகினாலும், விலக்கப்பட்டாலும், ஆட்சிமன்றப் பதவியை இராஜினாமாச் செய்து, ஒரு இடைத் தேர்தலில் போட்டியிட்டால், உங்கள் நடவடிக்கையையும், கட்சி நடவடிக்கையையும் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளிக்கக் கூடிய வாய்ப்பு தொகுதி மக்களுக்குக் கிடைத்திருக்குமல்லவா?

ப: அந்த வாய்ப்பை அளிப்பதற்காகத்தான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறோம்: ஊர்காவற்றுறையில் மட்டுமல்லாது, கோப்பாய், பருத்தித்துறை, நல்லூர் தொகுதிகளிலும் போட்டியிடுகிறோம்.

கே: அப்படியானால் இந்த நான்கு தொகுதிகளிலும் அல்லது ஒருசில தொகுதிகளில் உங்கள் கழக வேட்பாளர் தோல்வியடைந்தால், அதை எவ்வாறு ஏற்றுக்கொள்வீர்கள்? தமிழரசுக்கட்சியின் நடவடிக்கையைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டதாகக் கொள்வீர்களா?

'இல்லை: மீண்டும் எங்கள் கொள்கைகளை மக்கள் மன்றத்திலே பரப்பிக் கொண்டேயிருப்போம்' என்று சொல்லிவிட்டு

தீர்ந்துபோகும் என்கிறார்களே என்றேன் நான்.

''மனிதன் வாழ்வது எல்லாம் உணவிற்காகத்தான் என்றால், பன்றியின் சித்தாந்தமும், மனிதனின் சித்தாந்தமும் ஒன்றாகிவிடும். எங்களுக்கும் தன்மானம் என்று ஒன்று உண்டு. மானத்தை விற்று வயிறு வளர்க்க நாம் தயாராக இல்லை.

பொருளாதார முன்னேற்றம் முதலிய சகலதுக்கும்

''சிறுவர்களுக்கேற்ற வேட்டியை தயாரியுங்கள்''

நெல்லியடியிலிருந்து எட்டாம்வகுப்புபயிலும் க. பாலசுப்பிரமணியம் என்ற சிறுவன் எழுதுகிறார்:

''எட்டு வயதுக்கும், பதினைந்து வயதிற்குமிடைப்பட்ட என்னைப்போன்ற சிறுவர்கள் கோயில்களுக்குச் செல்லும்போது, அணிந்து செல்வதற்கு அளவான வேட்டிகளைப் பெற்றுக் கொள்ளமுடியாதிருக்கிறது. இதனால் என்னைப்போன்ற சிறுவர்கள் காற்சட்டை, அல்லது சாரத்தையே அணிந்து கோவிலுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

ஆகையால் எமது குறையைக் கவனிக்கவேண்டியது நெசவாளர் கடமை, பல வித அளவுகளில் வேட்டிகளைத் தயாரித்தால் இக்குறை நீங்கி நாமும் வேட்டி கட்டிக் கொண்டு கோயிலுக்குப் போகலாமல்லவா?

அகிலஇலங்கை ரீதியிலான கவிதை—கட்டுரை போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி தென்கருணையம்பதிஇந்து வாலிபர சங்கம் இந்து இளைஞர்களிடையே சமய ஆர்வத்தையும், கருத்துக்களைத் தெளிவுற எடுத்துரைக்கும் ஆற்றலையும் வளர்க்கும் நோக்குடன் அகில இலங்கை ரீதியிலான கட்டுரை கவிதைப்போட்டிகளை நடாத்துகின்றது.

இப்போட்டிகளில் பல்கலைக்கழக, உயர்கல்விநிலைய பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம் என்றும் கட்டுரைகள் ஐந்து பக்கங்களுக்கும், கவிதைகள் நாற்பது வரிகளுக்கும் மேற்படுதல் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கட்டுரைத்தலைப்புகள்: இன்றைய இந்து இளைஞர்களின் சிந்தனைக்கு, காலத்திற்கேற்ற முறையில் சமயாசார முறைகள் மாற்றப்படவேண்டுமா எதிர்காலத்தில் நம் சமயமும், மொழியும், இன்று நம்மிடையே வள்ளுவன் பிறந்தால் சமுதாய மறுமலர்ச்சியில் சமயத்தின்பங்கு

கவிதைத்தலைப்புகள்: எங்கள் மதத்திற்கு இன்னல் விளைந்தால், எம் மதப் பெருமை சொல்லிடப் போமோ, இந்துமதமே! உன் எதிர்காலம்,

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்பு கட்டுரை கவிதைகள் அனுப்பிவைக்கப்படவேண்டுமென்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

களும் கட்சிகளும் தோன்றலாம். அவை மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறலாம். மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்ற ஒரு

காட்டவேண்டுமெனப் பேசு நியாயமாகாது. இப்போது இதைத் திருத்தமுடியாவிட்டாலும் இனியாவது இதைத் திருத்திதானுக வேண்டும்.

கூட்டணிக்கு ஆதரவாக பிலிப் மகன் பிரசாரம் செய்வார்

கோட்டை, வெள்ளி

கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனவின் மூத்த மகன் திரு. இன்டிகா குண்வர்த்தன கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவாக நாடு முழுவதும் பிரசாரம் செய்வார்.

அவர் மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து கொண்டதுடன், இலங்கையில் சோஷலிச அமைப்பை உருவாக்கத் தனது முழு நரத்தையும் ஒதுக்கப்போவதாகவும் அறிவித்திருந்தார்

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் திரு. பிலிப் குணவர்த்தன தலைமறைவாக இருந்த சமயத்தில் தான்மூத்தமகன் 'இன்டிகா' பிறந்தார் இந்தியா - இலங்கை ஆகிய இரு நாடுகளையும் நினைவு கூருமுகமாகவே இன்டிகா' என்ற பெயர் அவருக்கு வைக்கப்பட்டது.

வரும் பொதுத்தேர்தலில் அவர் எந்தவொரு இடத்திலும் போட்டியிடமாட்டாரென்றும், ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைகளைக்கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளாரென்றும் கட்சி வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன

றப்பர் ஆராய்ச்சி நிலையத்தில் உயர் பதவி வகித்த திரு. இன்டிகா மார்ச் 31-ம் திகதியிலிருந்து தமது பதவியை ராஜினமாச் செய்துவிட்டு கம்யூனிஸ்ற் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

தனது தகப்பனருடைய மக்கள் ஐக்கிய முன்னணி சோஷலிசம் நாட்டில் ஏற்படவும், முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதையுமே முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தது ஆனால் 1965க்கு பிறகு அது தன் கொள்கைமாற்றிக் கொண்டுவிட்டது. என்று பிலிப் மகன் குணவர்த்தன சொன்னார்.

''கடந்த ஐந்து வருடகாலத்தில் விலைவாசி விஷம் போல உயர்ந்து விட்டது. வேலையில்லத்திண்டாட்டம் வளர்ந்துவிட்டது'' என்று கூறிய அவர் இக்காரணங்களுக்காக நான் கம்யூனிஸ்ற் கட்சியில் சேர்ந்து கொண்டேன் என்றார்.

புகார்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் சென்ற பஸ்ஸில் பிரயாணிகள் இருவரை பஸ்கண்டக்டர் தாக்கியதாக சாவகச்சேரிப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது. சத்தியமூர்த்தி கந்தசாமி என்போரே இப்புகாரைச் செய்துள்ளனர்.

மீசாலை பிரயாணிகள் சங்கக் காரியதரிசி திரு. பொ. இராசகுலசிங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி கோரியுள்ளார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

பாவித்த மொறிஸ் கொமேசல் 5 தொன்
லொறி என்ஜின் விற்பனைக்குள்ளது.
தேவைப்படுவோர் எம்மிடம்
தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாண ஐக்கிய
வியாபாரச்சங்கம்,
420, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

தமிழரசுக்கட்சியின் செல்வாக்கு உச்சக்கட்டத்தில் இருந்தகாலத்தில் அதன் செயல்திட்டங்களை வகுப்பதில் பெரும் பங்குகொண்டவர் என்பதை இவரை எதிர்ப்போரும் ஏற்றுக் கொள்கிறார்.

சில நாட்களுக்குமுன் இவருக்கும், தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும் இடையே, சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் பற்றியும், அடையாள அட்டைச் சட்டம் பற்றியும் நடைபெற்ற பகிரங்க விவாதம் நமது நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு புது திருப்பத்தை-வரவேற்கவேண்டிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இது வேறு மாறுபட்ட கருத்துக்கொண்டோர், மக்களை நடுவர்களாகவைத்து, அவர்கள் முன்னிலையிலேயே 'மோதிக் கொள்வதைவிடச் சிறந்த மக்களாட்சிமுறை வேறு என்ன இருக்க முடியும்?

மக்கள் கவனம்

திரு. நவரத்தினத்தை அவரது யாழ்நகர இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்து, பேட்டிக்கட்டுரைத் தொடரொன்று எழுதவிடுக்கும் எனது எண்ணத்தை வெளியிட்டபோது, சிரித்துக் கொண்டே 'நல்ல காரியம் தான்' என்று வரவேற்று, ''இதுவரை யார், யாரைச் சந்தித்துள்ளீர்கள்?'' என்று கேட்டார். ''உங்கள் தொகுதி மீதுதானே தமிழ் மக்களின் கவனமெல்லாம் திரும்பியிருக்கிறது எனவே உங்களுடன்தான் ஆரம்பிக்கிறேன்!'' என்று சொன்னபோது, ''அதுவும் சரிதான்!'' என்று ஆர்ப்பாட்டமாகச் சிரித்துக்கொண்டே, அண்மையில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து, பேட்டியை ஆரம்பிப்போமா?'' என்றார்.

''திருவாளர் அமிர்தலிங்கத்துடன் நடத்திய பகிரங்க விவாதம் எப்படி நடந்தது? அவரது பதில்கள் உங்களுக்குத் திருப்தியாக இருந்தனவா? என்று பூர்வபீடிகையாக ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

தனிப்பட்ட தாக்குதலை தக்கபதில் என்ற ரீதியில் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசி விட்டுப்போய்விட்டார்! எனது கேள்விகளுக்கு அவர்களால் உளமார சரியான பதில் கொடுக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்'' இது நவரத்தினத்தாரின் பதில்.

''ஊர்காவற்றுறைத் தொகுதியின் உறுப்பினர் என்ற முறையில், கடந்த இருபதாண்டு காலத்தில், அந்தத்தொகுதிக்காக என்

கைநழுவவிடாமல் பிந்திய கடமையை நிறைவேற்றியுள்ளேன் என்பதுதான் மகிழ்ச்சிகரமான விஷயம்.

''தமிழ் மக்களுக்கு ஆபத்தான மசோதாக்களைத் தனியே நின்றுவது எதிர்த்துவாதாடியிருக்கின்றேன். நான் விரும்பிய பலனை அளிக்காவிட்டாலும், மக்களுடைய விழிப்புணர்ச்சியை தட்டி எழுப்பியிருக்றேன் என்ற திருப்தி உண்டு எதிர்காலம்தான் இதனுடைய பெறுபேறுகளைக்காட்டும்.

''தொகுதி வேலைகளைப் பொறுத்த அளவில் நூற்றுண்டு நூற்றுண்டாக எந்த விதமான வைத்திய வசதியும் இல்லாமல் இருந்த அனலைதீவுக்கு ஒரு மருத்துவ மனை நிறுவி முழுநேர டாக்டரை நியமித்து அந்தக கடலால் சூழப்பட்ட கிராமத்தில் வாழும் மக்களுக்குச் சரித்திலேயே முதன் முறையாக வைத்திய வசதி ஏற்படுத்தியுள்ளேன்.

அதே மாதிரி, நயினதீவுக்கும் ஒரு டாக்டரை நியமித்து வைத்திய வசதிகளைச் செய்திருக்கிறேன்.

புங்குடுதீவுக்குச் சதாலமும் பிரச்னையாயிருந்த குடிதண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்கவழிசெய்து, ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் குழாய்மூலம் தண்ணீர் விநியோகித்தும், குழாய்கள் செல்லா இடங்களுக்கு லொறிகள் மூலம் கொடுப்பதற்கும் ஆன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

புங்குடுதீவு கிழக்குப் பகுதிக்கு, றேட்டுக்களே இல்லாத இடத்தில், மராமத்து இலாகா புதிய றேடு அமைத்து வேலைகள் நடைபெறுகின்றன.

நெடுந்தீவுக்கு முதன்முதல் பஸ் சேவையை ஏற்படுத்திய பாராளுமன்ற உறுப்பினன் நான்தான். (பெருமையுடன் மார்தட்டி, மகிழ்ச்சியுடன் சொல்லுகிறார்)

தண்ணீர் விநியோகத் திட்டத்தை விஸ்தரிக்க, இப்பொழுதுள்ள உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசாவின் உதவியுடன் 62,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, வேலை பூர்த்தியடையும் நிலையில் இருக்கிறது,

நெடுந்தீவு மோட்டார் வள்ளப் போக்குவரத்துக்குப் புதிய மோட்டார் வள்ளமொன்றையும் புதிதாக ஈடுபடுத்தியுள்ளேன். அதுவுமன்று, ஊர்காவற்றுறை—நெடுந்தீவு பயணத் தூரத்தை அரைவாசியாகக் குறைத்து. குறிக்கட்டுவானிலிருந்து இப்பொழுது சேவை நடக்கிறது. இதன் பெறுபேறுதான் முன்னே நெடுந்தீவுக்கு நாளொ

தொகுதியில்தான் - வேலணையில் ஓர் பள்ளிக்கூடம் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இப்படி நீண்டதொரு பட்டியலைச் சொல்லிக் கொண்டே போன திருவாளர் நவரத்தினம் ''தொகுதி அபிவிருத்தி வேலைகளுக்காக அரசாங்கத்தின் உதவிபெற வேண்டுமாயிருந்தாலும் ஆளும் கட்சியினருக்கோ, அரசாங்கத்துககோ சகலதுககும் 'ததாஸ்து' போட்டுக் கொண்டிருக்கத்தேவையில்லை'' என்று சொல்லி தொகுதியின் நன்மையைவிட, தமிழ் இனத்தின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதையே தன்னுடைய முதற்கடமையாகவரித்துக்கொண்டிருப்பதைச் சொல்லாமற் சொன்னார்.

பத்தாம் திகதிக்கு முன்னர் வரும் வாசகர் கேள்விகளுக்கு திரு நவரத்தினம் 'ஈழநாடு' மூலம் பதிலளிப்பார்

தமிழர் உரிமைகள்

தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பற்றியே திரு. நவரத்தினம் அழுத்திச் சொல்லிக் கொண்டிருந்தமையால் ''பாராளுமன்ற முறையினுல் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெற முடியும் என்று நம்புகிறீர்களா''? என்று கேட்டேன்.

பாராளுமன்ற முறை பலனளிக்கும் என்ற நம்பிக்கையுண்டு. அடுத்து வரப்போகிற பாராளுமன்றத்திலே, தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இன்னுமோர் அரிய சந்தர்ப்பம் வரத்தான் போகிறது. சோல்பரி கமிஷனர்கள் வந்தகாலத்தில் சந்தர்ப்பத்தையும் நாம் நழுவவிட்டதைப் போல, அடுத்துவரும் சந்தர்ப்பத்தையும் நாம் நழுவ விடக்கூடாது. பாராளுமன்றத்தை உபயோகித்து நமது இனத்தின் தனித்தன்மையை நிலைநாட்டுவதற்காக நாம் உழைக்க வேண்டும். ஆனால் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு கீழ்ப்படிந்து சலுகைகளுக்காக இயங்குவோமானல், அடுத்த சந்தர்ப்பத்தையும் இழந்துவிடுவோம் என்பது நிச்சயம்.

அரிய சந்தர்ப்பம்

கே: தாங்கள் குறிப்பிடும் இந்த 'அரிய சந்தர்ப்பம்' எந்த சூழ்நிலையில்-எந்த உருவத்தில் வரும் என்று விளக்குவீர்களா?

ப: இனி வரப்போகும் பாராளுமன்றத்திலோ அல்லது அதற்கு அடுத்த பாரா

ந்த நான்கு பேர் தாலே போதுமானது.

கே: ஒருவர் மட்டும்வந்தாலும் போதும் என்று சொல்லுகிறீர்களா?

ப: இல்லை.

கே: குறிப்பிட்டகட்சியின் வேட்பாளனுக ஒருதொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பின்னர் அந்தக்கட்சியிலிருந்து விலகிவிட்டாலோ, அக்கட்சிக் வேட்பாளராக நின்று பெற்றபதவியையும் இராஜினமாச் செய்வதுதானே சரியான மக்களாட்சி மரபு?

ப: ஆம்.

கே: உங்களுடைய அரசியல் வாழ்வில் இம்முறையை எவ்வளவு தூரம் கடைப்பிடித்துள்ளீர்கள்?

ப: 'இந்த ஜனநாயக சம்பிரதாயத்தை நான்முழுக்க முழுக்க கடைபிடித்திருக்கின்றேன், தமிழரசுக் கட்சியின் வேட்பாளனுக 1963 இடைத்தேர்தலிலும், 1965 பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டேன். இந்தத் தேர்தல்களில் தமிழரசுக் கட்சி தனது கொள்கைகளையும், இலட்சியத்தையும் விளங்கப்படுத்தி. மக்களுக்குப் பல வாக்குறுதிகளை அளித்தது' (இந்தக்கட்டத்தில் திரு. நவரத்தினம் உணர்ச்சி வயப்பட்டவராய், குரலைச் சற்று உயர்த்தி, தார்மீக ஆவேசத்துடன் பேசினர்).

'இந்தக் கொள்கை. இலட்சியம் வாக்குறுதிகள் இவற்றிலிருந்து இம்மியளவேனும் பிசகாமல் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் நடந்துகொண்ட ஒரேயொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் நான் தான்!' (நெஞ்சில் கைவைத்துச் சொல்கிறார்). இறுதிவரை கட்சிக் கொள்கைகளைக் கைவிடாது பாதுகாத்து வந்தவன் நான் ஒருவனே!

விலகவில்லையே!

நான் கட்சியிலிருந்துவிலகவில்லை விலக்கப்பட்டேன் விலகியிருந்தால் நிச்சயமாகப் பதவியைத் துறந்திருக்க வேண்டும் ஆனல் நான்விலகவில்லையே.

1948ம் ஆண்டு, தமிழ்க் காங்கிரஸிலிருந்து என்ன காரணத்துக்காக திருவாளர்கள் செல்வநாயகம், காலஞ்சென்ற வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் விலக்கப்பட்டார்களோ, அதே நிலையில் தான் நானும் நடத்தப்பட்டேன் அன்று திருவாளர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம், சிவபாலன், செனட்டர் நாகநாதன் ஆகியோர் தம்பதவிகளைத் துறக்கவில்லை. அவர்களும் அன்று நான் சொல்லிய

ஏற்றுக் கொண்டு விட்டதாகக் கொள்வீர்களா?

'இல்லை; மீண்டும் எங்கள் கொள்கைகளை மக்கள் மன்றத்திலே பரப்பிக் கொண்டேயிருப்போம்' என்று சொல்லிவிட்டு 1952ம் ஆண்டு, தமிழ் காங்கிரஸிலிருந்து விலகி, தமிழரசுக் கட்சி முதன் முறையாகப் போட்டி போட்டபோது இரண்டே இரண்டுதொகுதிகளில்தான் மக்கள் ஆதரவு கிடைத்த 'கதை' யைச் சொன்னர்.

கே: தேர்தலுக்குத் தேர்தல் தொகுதி மாறும் வேட்பாளர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஜனநாயக முறைப்படி பிழையல்ல. ஆனல் நோக்கம் பிழையென்றல் பிழைதான் அரசியல் வானிலிருந்து என்னை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று வேட்பாளர்களைத் தொகுதிமாற்றம் செய்வது, கட்சியின் சர்வாதிகாரப் போக்கைத்தான் காட்டுகிறது.

திரு. நவரத்தினம் எனது கேள்வியின நோக்கத்தைச் சரியாகத்தான் புரிந்து கொண்டார் என்பதை அவரது பதில் காட்டிற்று!

இஸ்ரேலைப்போல

அடுத்து எங்கள் பேச்சு சுயாட்சிக கழகக் கொள்கைகளைப் பற்றியும், தனித்தமிழ் நாடு கோரிக்கை பற்றியும் திரும்பியது. 'பாராளுமன்ற ஆட்சிமுறை மூலம் தனித் தமிழ் நாடு பெற்றுவிட முடியுமா? என்ற கேளவிக்கு, முற்றுக ஆம் என்று சொல்ல முடியாவிட்டாலும் ஆட்சிமன்ற முறையை ஓரளவுக்குப் பயன்படுத்தி பல முனைகளிலிருந்து போராடித்தான் பெறவேண்டும்'' என்றார் இலங்கையைப்போன்ற சின்னஞ்சிறு நாட்டைப் பிரிக்க முடியுமா என்றதற்கு இஸ்ரேலைச் சுட்டிக் காட்டி இஸ்ரேலைப்போன்றே தமிழ் இலங்கையும் சுதந்திரமாக இயங்கக்கூடிய சாத்தியக்கூறுகள இருப்பதாக விவாதித்தார் திரு. நவரத்தினம்.

தனித்தமிழ்நாடு வேண்டுமென்றல் திருவாளர் சுந்தரலிங்கத்துடன் சேர்ந்து போராடலாமே என்றதற்கு பெருஞ்சிரிப்பு ஒன்று சிரித்துவிட்டு அவருடைய இலட்சியத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்று நழுவிக்கொண்டார்.

தமிழ்மக்களுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் அடிப்படை பொருளாதாரம்தான் எனவே நாட்டின் பொருளாதாரம் சீரடைந்து, சோஷலிஸ, சமத்துவ. சமுதாயம் ஏற்பட்டால் தமிழ்மக்களுடைய மொழிப் பிரச்னையும் அதனோடு ஒட்டிய ஏனைய பிரச்னைகளும் தாமாகவே

ந்தமும் ஒன்றாகிவிடும். எங்களுக்கும் தன்மானம் என்று ஒன்று உண்டு. மானத்தை விற்று வயிறு வளர்க்க நாம் தயாராக இல்லை.

பொருளாதார முன்னேற்றம் முதலிய சகலதுக்கும் அரசாளும் உரிமைதான் மூலாதாரமாகும். அரசாளும் உரிமை பெற்றுவிட்டால் நாட்டைப் பொருளாதார முறையில் அபிவிருத்தி செய்வதற்குப் பல நாள் செல்லாது.

சிங்களக் கம்யூனிஸம்

இலங்கையில் சோஷலிஸம், கொம்யூனிஸம் என்பனவற்றை இலங்கைச் சோஷலிஸம், கம்யூனிஸம் என்று சொல்ல முடியாது. இங்கே இயங்கி வருகிற கட்சிகளிடம் சிங்களக் கம்யூனிஸம் சிங்களச் சோஷலிஸம் என்பனவற்றைத்தான் நாம் காண்கிறோம், நமது இடதுசாரி அன்பர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் ஒரு மானசீக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் நமது இனத்தின் ஒரு சாபக்கேடு!

சுமார் ஒன்றரை மணித்தியாலம் மனம்விட்டுப் பேசிகொண்டிருந்த திரு. நவரத்தினத்திடம் இறுதியாக ஒரு கேள்வியைக் கேட்டேன். அது 'நமது வாசகர்களிடமிருந்து ஏதாவது கேள்விகள் வந்தால் - பேட்டியில் வந்துள்ள பிரச்னைகளைப் பற்றிய கேள்வியாக இருந்தாலும் சரி, வேறு பிரச்னைகளைப் பற்றிய கேள்விகள் இருந்தாலும்சரி அவற்றிற்கு 'ஈழநாடு' மூலம் பதிலளிக்க இசைவீர்களா?' என்பது தான்.

கேள்விகளுக்குப் பதில்

'எந்தக் கேள்விக்கும் எந்த நேரத்திலும் பதில் அளிக்கத்தயார்!' என்று அழுத்தந்திருத்தமாக சொன்னதோடு, எனக்கும் விடை கொடுத்து அனுப்பினர் ஊர்காவற்றுறை முன்னைநாள் எம். பி! எதிர்காலத்திலும் எம். பி. யாவாரா? காலம்தான் பதில் சொல்லும்.

மரண அறிவித்தல்

கந்தையா நாகம்மா

காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியார் திருமதி நாகம்மா காலமாகிவிட்டார் அன்னரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3 மணியளவில் கொட்டடி சீனிவாசகம் வீதியில் உள்ள இல்லத்திலிருந்து தகனக் கிரிகைக்காக வில்லூன்றிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் நண்பர்களும் உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 2101

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org